Free Circulation Germany- England
மணி:70 - ஓசை: 285 ஆனி. June.2020

# வெற்றிமணி

ESTD 1950
Successful Publishing 26 years IN EUROPE
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien & Schmuck

எம்மோடு இணைந்திருங்கள்
Königswall 16 (Am Hbf)
44137 Dortmund
Tel:0231 162377



## சமூக இடைவெளியும் இளையவர் மனநிலையும்...



Dr.IN

## MERGE IN DIVINE LIGHT THROUGH YOGIC EXERCISES

## எப்போதான் இனி சேலை உடுப்பது, எப்பதான் வேட்டி கட்டுவது

## சில பேருக்கு தாங்கள் தமிழ் எண்டு சொல்ல வெட்கம்

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி

# முதலாவது அலையை விட இரண்டாவது அலைக்கு ஏன் இந்த வீரியம்!

## 100 ஆண்டுகளுக்கு முன்னரும் இதே சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்பட்டது

## ஸ்பானிஷ் காய்ச்சல் 1918 இல் சொன்ன பாடம்!

மு.க.சு.சிவகுமாரன்





நாளைய நடப்புக்கு நேற்றைய நடப்புகளே பாடம். வாழ்கையில் நாளை நடக்க இருக்கும் இழப்புகளில் இருந்து, நம்மை பாதுகாக்க பழைய பாடங்களைத் திரும்பிப்பார்த்தல் அவசியம். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் (1918-1919) ஆண்டுகளில் ஸ்பானிஷ் புளு ( Spnish flou) த ஸ்பானிஷ் புளு, 1918 முதல் ஐரோப்பாவை உலுக்கியது.

ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் தொடங்கியதாக கருதப்பட்டதால் ஸ்பானிஷ் காய்ச்சல் என குறிப்பிடப்படுகிறது. அமெரிக்கா மற்றும் ஆசிய நாடுகளையும் தாக்கியது. கடந்தகால வரலாற்றில் மிகக் கடுமையான தொற்று நோயாகும். பறவை வம்சாவளியைச் சேர்ந்த மரபணுக்களைக் கொண்ட எச் 1 என் 1 வைரஸால் இது ஏற்பட்டது.

வைரஸ் எங்கிருந்து தோன்றியது என்பது குறித்து உலகளாவிய ஒருமித்த கருத்து இல்லை என்றாலும், இது 1918-1919 காலப்பகுதியில் உலகளவில் பரவியது.

United States. இல் இது முதன் முதலில் 1918 வசந்த காலத்தில் இராணுவ வீரர்களில் அடையாளம் காணப்பட்டது. (ஸ்பானிஷ் காய்ச்சல் ) சுமார் 500 மில்லியன் மக்கள் அல்லது உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இறப்புகளின் எண்ணிக்கை உலகளவில் குறைந்தது 50 மில்லியனாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது, அமெரிக்காவில் 675,000 பேர் மரணித்துள்ளனர்.




100 ஆண்டுகளுக்கு முன்வந்த இக்கொடிய தொற்றுநேய்க்கும் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. அதேபோல் கொரோனா Covid 19 இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால் இதனைக் கட்டுப்படுத்த எடுத்த முதல் நடவடிக்கை தனிமைப்படுத்தல், சமூக இடைவெளி (1.5 மீ.யேர்மனி. இங்கிலாந்து 2.மீ) ஆகும்.

இதனையே 100 வருடங்களுக்கு முன்னரும் இன்று யேர்மனி இத்தாலி ஸ்பெயின் இங்கிலாந்து நாடுகளில், கடைப்பிடிக்கப்பட்டது போல், ஸ்பானிஷ் காய்ச்சலைக் கட்டுப்படுத்த தேவாலயங்கள், தியேட்டர்கள், பொது களியாடங்கள், உடனடியாக நிறுத்தப்பட்டன. பொது இடங்களில் துப்புதல் முற்றாகத் தடைசெய்தனர். பொதுவான போக்குவரத்து குறப்பிட்ட சில நிபந்தனைகளுடன் நடத்தப்பட்டது. முகக்கவசம் கட்டயாமாக்கப்பட்டது.

இதன் மூலம் மருந்தில்லாத இந்த தொற்று நோய்யை சிறிது கட்டுகுள் கொண்டுவந்தனர். பின்னர் இன்று ஐரோப்பாவில் தொற்று குறைந்த போது கடைப்பிடிக்கப்பட்ட விதிமுறைகள் தளர்த்தப்பட்டதுபோல் அன்றும் தளர்த்தப்பட்டது.

1918 ஆண்டு இலையுதிர்காலத்தில் மீண்டும் 2 வது அலையாக வெடித்தது.

முடங்கிப்போய் இருந்த சமூகத்தொடர்பாடல்கள் தளர்த்தப்பட்டதால், உடனடியாக ஒன்றுகூடலும் தியேட்டர்களும் போக்குவரத்துகளும் இயங்க ஆரம்பித்தன. தேவாலயங்கள் கதவைத் திறந்தன. ஒரு முறை தொற்றுக்கு பயந்த மக்கள் மெல்ல மெல்ல அந்த பயம் நீங்கி வீறுகொண்டு உலா வந்தனர். சமூக இடைவெளி மெல்ல மெல்லக் குறைய ஆரம்பித்தது. தனிமைப்படுத்தல் மற்றும் சமூக தூரத்தைப் பற்றி மக்கள் மிகவும் மோசமாக உணர்ந்தனர்.

வைரஸ்சோ நான் ஒழியவில்லை. நீங்கள் ஒழிந்து இருந்துவிட்டு வெளியில் வந்து வலிய மாட்டிக்கொள்கிறீர்கள் என அது முதல் முறையை விட 2 வது தடவை வீறுகொண்டு தாக்கியது.

இரண்டாம் நிலை பாக்டீரியா தொற்றுநோய்களுக்கு சிகிச்சையளிக்க (vaccine) நுண்ணுயிர் எதிர்ப்பிகள் இல்லாததால், அன்று ஸ்பானிஷ் காய்ச்சல் உலகளாவிய கட்டுப்பாட்டு முயற்சிகள் தோல்விகண்டன.


04 ஆம் பக்கம் பார்க்க...







வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 285



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவிக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Brinker Höhe 13
58507 Lüdenscheid
Germany
Tel: +49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# கோட்டாபயவின் உறுதியான 'பாதை' சிங்கள பௌத்த இராணுவ மயம்!

கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி

போரில் கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவதற்கு 'கோவிட் 19' ஐ காரணம் காட்டி அனைத்து வகையான தடைகளையும் கோட்டாபய ராஜபக்‌ஷ அரசாங்கம் போட்டது. இந்தத் தடைகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள்



தமது உறவுகளை நினைவுகூர்ந்தார்கள். இது கடந்த 18 ஆம் திகதி நடந்தது. போரின் வெற்றியை அரசாங்கம் வழமை போல இராணுவ அணிவகுப்புக்களுடன் பிரமாண்டமாகக் கொண்டாடியது. இதற்காக முப்படைகளும் களமிறக்கப்பட்டு, அரசியல் பிரமுகர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். இது மறுநாள் 19 ஆம் திகதி கொழும்பில் நடந்தது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் சமூக இடைவெளியைப் பேணமாட்டார்கள என அதனைத் தடை விதித்த அரசாங்கம், கொழும்பு வெற்றிவிழாவில் சமூக இடைவெளியைப் பேணியதா என்ற கேள்விக்குத் தொலைக்காட்சிச் செய்திகளைப் பார்த்தவர்களுக்குப் பதில் தெரிந்திருக்கும்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, வழமை போல சிங்களக் கடும்போக்காளர்களை திருப்திப்படுத்துவதைத்தான் இலக்காகக் கொண்டிருந்தார். 'நாட்டுக்காக பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்த படையினர் தேவையற்ற அழுத்தத்துக்கு உள்ளாக நான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அதே வேளை, எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதே னும் ஒரு சர்வதேச நிறுவனம் அல்லது சர்வதேச அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக்கொள்ள நான் ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை' என்ற அறிவிப்பை அவர் வெளியிட்



டார். இது சிங்களக் கடும்போக்காளர்களால் பெரிதும் வரவேற்கப்படும் ஒரு அறிவிப்பு.

போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானத்துக்குப் புறம்பான செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உட்பட, சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு முக்கியமானது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையைத்தான் ஜனாதிபதி குறிப்பாக சுட்டிக்காட்டியிருக்கின்றார் என்பதும் வெளிப்படையாகத் தெரிகின்றது. இங்குதான் இலங்கை குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கியமாக தமிழர்கள் மீதான படுகொலைகளுக்குப் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்ற அனைத்துலக அழுத்தம் இங்கிருந்துதான் உருவாகியது.

சர்வதேச மனிதபிமானச் சட்டங்களை ஏற்றுக்கொண்ட ஒரு நாடு, ஐ.நா.வின் சாசனங்களின்படி செயற்படுவதாக உறுதியளித்துள்ள ஒரு நபடு அவ்வாறான அமைப்பொன்றிலிருந்து இவ்விதம் விலகிக்கொள்வதன் விளைவுகள் எவ்வறானதாக இருக்கும் என்பது ஜனாதிபதிக்குத் தெரியாததல்ல. அதனால், ஐநாவோ மனித உரிமைகள் பேரவையோ பாதிக்கப்படப்போவதில்லை. பாதிப்பு முழுக்க இலங்கைக்குத்தான். ஆனால், வரப் போகும் தேர்தலை இலக்குவைத்த ஒரு உரையாக இது இருந்தது. இராணுவ வாதத்தையும், இனவாதத்தையும் தமது அடிப்படையாகக் கொண்டுள்ள ஜனாதிபதி இவ்வாறான ஒரு அறிவித்தலைத்தான் வெளியிடுவார் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான். அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமது பிரசாரத்தை அநுராதபுரத்திலிருந்து ஆரம்பித்த போதே இவ்வாறான ஒரு அறிவித்தலைத்தான் கோட்டாபய வெளியிட்டிருந்தார். அதாவது, இராணுவத்தினரைப்

27 ஆம் பக்கம் பார்க்க...



02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

5 வயதுக்கு குறைவானவர்கள், 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் இறப்பு அதிகமாக இருந்தது. 20-40 வயதுடையவர்கள் உட்பட ஆரோக்கியமான மக்களில் அதிக இறப்பு இந்த தொற்றுநோயின் ஒரு தனித்துவமான அம்சமாகும். உலகளவில் குறைந்தது 50 மில்லியனாக உயர்வடைய இந்த 2 ஆம் சுற்று வந்த தொற்றுநோய் காரணமாகியது. உலக அளவில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் இத்தொற்றுக்குள்ளானார்கள். இந்தியாவையும் விட்டுவைக்கவில்லை. அங்கும் 1918 இல் இந்த சமூக இடைவெளி பின்பற்றினார்கள். அதற்கான ஆதரமாக அவர்கள் போட்ட இரு வட்டங்களை இங்கு காணலாம்.

இன்று Covid 19 மறைய குறைந்தது இன்னும் 2 வருடங்கள் ஆகும் என உலக சுகாதார மையம் எச்சரிகை விடுத்துள்ளது. ஒவ்வொரு தனிமனிதரும் எழுதாத சட்டமாக இந்த சமூக இடைவெளியைப் பேணுதல் அவசியம். எப்படி இந்த Covid 19 ஒரு அளவு கட்டுக்கு கொண்டுவர முடிந்ததோ அதற்கு நமது அர்ப்பணிப்பான செயற்பாடுகள் இன்னும் தொடர வேண்டும். ஆண்டவன் அறிவைத்தந்துள்ளான். அந்த அறிவை உணர்ந்து நடப்போம். நாம் நலமாக இருந்தால்தான் எம்மால் பிறரையும் நலமாக காக்க முடியும். குறைந்த பட்சம் எங்கள் குடும்பத்தையாவது காக்கமுடியும்.

இந்த அபாயகரமான காலம் முடிந்தபின் இன்னுமொரு நெருக்கடிக்கு மனிதகுலம் முகம்கொடுக்க வேண்டும் ஒன்று உணவு, மற்றது வேலைவாய்ப்புகள். பொருளாதாரத்தை எவ்வளவு இந்த வைரஸ் தாக்கியது என்பது பின்னரே உணரமுடியும்.




யு.எஸ். இராணுவத் தளத்திலுள்ள ஆண்கள் உப்பு நீரால் வாய்யை ஆலம்பினார்கள். வைரஸ் 'தடுப்பு நடவடிக்கைகளில்' இது பரவுவதை நிறுத்துவதாக அறிவுறுத்தப்பட்டது.




முதலாம் உலகப் போரின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு வீரர்கள் வடக்கு பிரான்சில் எட்டாபில்ஸில் ஒரு சிகரெட்டை ஏற்றி வைத்தனர். 1918-1920 வரை உலகை பேரழிவிற்கு உட்படுத்திய காய்ச்சல் பாதிப்பு சர்ச்சைக்குரியது என்றாலும், இந்த பிரெஞ்சு இராணுவ முகாமில் தொற்றுநோய் தொடங்கியது இது போன்ற நிகழ்வுகளால் என்று பலர் நம்புகிறார்கள்.





துப்புதல் மரணத்தை பரப்புகிறது! போக்குவரத்து வாகனங்கள் புகையிரதம் எங்கும் இதற்கான பதாதைகள் வைக்கப்பட்டு இருந்தன.






1918 இலையுதிர்காலத்தில், வைரஸின் 'இரண்டாவது அலை' உலகத்தை வீழ்த்தியபோது, இறப்புக்கள் வியத்தகு முறையில் அதிகரித்ததைக் காட்டும் விளக்கப்படம்.



Influenza Epidemic Closes Schools, Churches, Theatres

DRUG STORES SWAMPED WITH "FLU" VICTIMS

HEALTH COMMISSIONER ISSUES PROCLAMATION ORDERING DRASTIC METHODS TO CHECK DISEASE SPREAD

NORTH END PUTS NEW PUNCH INTO WAR BOND DRIVE



# ஆகா வந்திடுச்சு சூம் பாட்டி (Zoom Party)

## எப்பதான் இனிச் சேலை உடுப்பது வேட்டி கட்டுவது!

என்னப்பா நான் இஞ்சை எதை உடுக்கிறது என்று மாறி மாறி உடுத்து கொண்டு இருக்கிறேன். ந நீங்க என்னவென்றால் நியூஸ் பார்த்துக்கொண்டு இருக்கிறியள். இஞ்சபாருங்கோ அண்டைக்கு சியாமிளாவின் மகளின் கல்யாணவீட்டுக்கு இதே உடுத்தனான்! நீங்களும் வடிவாக இருக்கு என்றும் சொன்ன நீங்கள். அட நான் எப்பதான் வடிவில்லை என்று சொன்னனான். இது அவன் மனதுக்குள் சொன்னது உங்களுக்கு கேட்டது என்றால் நிச்சயம் நீங்கள் ஆம்பிளைதான்.

வேட்டி தேடியெடுத்து அயன் பண்ணி கட்டிவிடும் வரைக்கும் நான் வேணும். இப்ப நான் கேட்ட கேள்விக்கு மட்டும் ஒரு பதிலும் இல்லை. ஏதோ எனக்கு சேலையுடுத்தி அழகு பார்க்கிற மன்மதன் என்ற நினைப்பு அவருக்கு. என்ன மிஞ்சி மிஞ்சிப் போனா ஒருக்கால் தாவணியை இழுத்து பிளவுசிலை பின்னுக்கு ஒரு ஊசி குத்திவிடுவார், இல்லை என்றால் ஒருக்கால் என்ரை சேலை காலடியில் ஏறி நின்றால், குனிந்து இழுத்து விடுவார். மற்றது கல்யாண வீடு என்றால் ஆலாத்தி எடுக்கும் போது மறைஞ்சு நின்று உஸ், உஸ், என்று சேலை விலத்தி வண்டிதெரியுது என்று சைகை காட்டுவார். ஏதோ இந்தக் கண்காணிப்புகக்கு மட்டும் தான் கல்யாணம் பண்ணினமாதிரி.

இப்ப கொரோன வந்ததும் வந்தது, கோவிலும் இல்லை, பிறந்த நாளும் இல்லை, திருமணங்களும் இல்லை, கவலைகள் மறக்க ஒரு கலைவிழாவும் இல்லை. பழைய படங்கள் பார்த்து பார்த்து ஏதோ சிவாஜி எம்.ஜி.ஆர்.முத்துராமன்.ஜெமினிகணேசன் நாகேஷ்,ஜெயலலிதா, பத்மினி சாவித்திரி எல்லாம் இப்பவும் உயிரோடு இருகிறமாதிரி இருக்கு. தியேட்டரில் படம் பார்க்காமல் அஜித் விஜய் எல்லாம் இன்னும் பிறக்காத மாதிரி இருக்கு.

ஏதோ வாழ்க்கையில் இன்று இப்படிக் கழிகிற காலத்தை கணக்கில் சேர்க்க




முடியாதது போல் வாழ்கை போகிறது. சேலை எப்பதான் உடுக்கிறது? விடுமுறைக்கு எப்பதான் புறப்படுகிறது. பாடசாலை 80ம் ஆண்டு பச் 90ம் ஆண்டு பச் என்று பச்பச்சா ஆண்கள் தனியாக பெண்கள் தனியாக வேறு நாடுகளில் சந்தித்து பழையகதைகள் பேசுவது. கோவிலுக்கு எப்ப போவது? கும்பிட்டு முடிய எப்ப இனிக் கூட்டம் கூடுவது. சொப்பிங் எப்ப போவது எப்படி மனுஷனின் பொறுமையைச் சோதிப்பது.

புதுக்கார் எப்ப மாத்திறது. வீட்டில் மனைவி ஆறு கறியோடு சமைத்தாலும் மெல்ல கடையில் ஏதும் வாங்கி போட்டுவிட்டு வந்து வீட்டில் எப்ப இனி டயட் நாடகம் ஆடுவது.

இப்படி எப்ப எப்ப என்ற கேள்வி அப்பப்பா அடுக்கிக்கொண்டே போகலாம். எப்போது என்ற கேள்விக்கு பதில் கிடைக்குமா? கிடைக்காதா?

நாம் புலம்பெயர்ந்து வந்து மிளகாய்த் தூள் இல்லாமல் குழம்பும், தேங்காய்ப் பால் இல்லாமல் சொதியும் வைத்த எங்கள் ஆரம்ப வாழ்க்கையை ஒரு முறை [Zoom] சூம்பண்ணிப் பார்த்தால் இதற்கும் ஒரு மாற்றீடு வராமலா போய்விடும்.

ஆகா வந்திடுச்சு சூம் பாட்டி. [Zoom Party ]

பிள்ளையள் ஏன் தாய்மாரும் இப்ப போட்டி போட்டுக்கொண்டு வெளிக்கிடுகினம். என்னப்பா நீங்கள் வேலையும் இல்லை ஒண்டுமில்லை உதில் இருந்து ரீவி யை நோண்டிக் கொண்டு இருக்கிறியள் என்பாள் மனைவி.. நீங்களும் வந்து வெளிக்கிட்டு வாருங்களேன். இண்டைக்கு கனடாவில் உங்கடை தம்பியின் மகளுக்கு கல்யாணம் அல்லோ. எனக்கு இப்ப சேலைத் தலைப்பை மட்டும் பின்னுக்கு பிளவுஸ்சில் ஊசியால் குத்திவிட்டால் போதும், மற்றது காலுக்குள் சீலை ஒன்றும் இழுக்கத் தேவை இல்லை. பிள்ளையளையும் வெளிக்கிடச் சொல்லுங்கோ. மகன் நீங்க சொன்னாத்தான் கேட்பான்.

அவன் அப்போதே வெளிக்கிட்டு விட்டான். மகள்தான் பேசிங் முடியவில்லையாம். நீங்கள் சறத்தோடை மேலை சேட்டைப்போட்டு ரையைக் கட்டுங்கோ, மடிக்கணனியை கவனமாக செட்பண்ணிவைத்தால் இடுப்புக்கு கீழ் தெரியாது.

வீடு எல்லாம் துப்பரவாக்க வேண்டாம். தேத்தண்ணிக் கோப்பை மற்றது மேசையில் கிடக்கிற உங்கட கடிதங்கள் பேப்பர்களை கொஞ்சம் ஒதுக்கினால்; போதும். இந்தச் சுவர் பக்கம் வேண்டாம். அதிலை வெளிச்சம் வராது. பிறகு நாம் கறுப்பாய்த் தெரிவோம். நேர யன்னலுக்கு எதிராக லப்ரொப்பை அதுதான் மடிக்கணனியை வையுங்கோ, மகளை ஒருக்கால் சரிபாக்கச்சொல்லுங்கோ. அவளுக்குதான் எந்த வியூவிலை தான் வடிவு என்று தெரியும்.

மற்றது வீட்டு போன் வயறைப் பிடுங்கிவிடுங்கோ. சூம் பாட்டி தொடங்கப்போகுது, அக்காவின் பிள்ளையள் அவுஸ்திரேலியாவில் இருந்து வருகினம். அண்ணன் தம்பி பிள்ளைகளும் அவை இலங்கையில் இருந்து வருவினம். கரன் கட்டு மழை என்றால் அங்கு தெளிவாக இருக்காது.

சூம்பாட்டி தொடங்கிவிட்டது. எனப்பா நேரில் இருக்கிறமாதிரி இருக்கு. இஞ்சை பாரும், தம்பியின் மகள் எனக்கு

06 ஆம் பக்கம் பார்க்க...



05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

லட்டு விருப்பம் என்று முகத்துக்கை நீட்டிப் போட்டு போகிறாள். நேரில் இருக்கிற மாதிரி இருக்கு. வீடு நல்ல பெரிதாகக்கிடக்கிறது. அது கனடா வீடு அப்படித்தானே. நான் அப்ப சொன்னேன் கனடாவிற்கு மாறுவோம் எண்டு நீங்கள் பயந்தாம்கொள்ளி. சரி சரி கொஞ்சம் இந்த லப்ரொப்பை திருப்பும். ஏன் அப்பா. இல்லை நான் பிறகு சொல்லுறேன் இப்ப திருப்பும். அவர் அதைப்பிறகு சொல்லுறேன் என்றது. –அலுமாரிக்கு மேல் அவசரத்தில் ஒதுக்கும்போது மேலை தூக்கிவைத்த பியர் போத்தல்கள் தலை நீட்டிக்கொண்டு எட்டிப்பார்க்குது.–என்றதுதான். இதை அண்ணர் யாழ்ப்பாணத்தில் இருந்து பார்த்தால் கதை கந்தல்.



ஏதோ விஜய் ரிவியில் சுப்பர் சிங்கர் மற்றது நீயா நானா வுக்கு குப்பைகளை விட்டு விட்டு செற்றை மட்டும் போக்கஸ் பண்ணிக் காட்டுவதுபோல இருக்குது எங்கடை சூம்பாட்டியும். என்னதான் இருந்தாலும் அண்ணனும் பிள்ளையளும் அந்த மாமரத்துக்குக் கீழே நின்று கதைக்கிற அழகு வரவே வராது. நீங்கள் அப்படி நினைக்க, அவர்கள் அட தம்பி குடுத்து வைத்தவன் பாரடா வீட்டை என்னமாதிரி வைச்சிருக்கிறான். ஒரு குப்பையும் இல்லை. இப்படியான அக்கரைப் பச்சை என்றைக்கும் இருக்கும்.

கல்யாணவீடு சூம்பாட்டி இப்ப முடிஞ்சுது. இனி மகள் Holiday கொலிடே போகிறாளாம், மாலைதீவுக்கு. என்னடா ஒரு பிளேனும் இல்லை எப்படி பறக்கப்போகிறாள் என்று பார்த்தால், அவளது சிநேகிதிகள் சூம்பாட்டி கொலிடேயை ஒழுங்கு செய்திருக்கினமாம். போன முறை போனதை நினைவு படுத்தி அந்த குறூப்புகள் கதைக்கபோகினமாம்.

அதற்கு பெட்டி அடுக்குவதில் இருந்து எல்லாம் நடக்கும். இந்த உடுப்பு வெய்யிலுக்கு நல்லதோ. அட இது கொஞ்சம் கண்ணறையாக இருக்கு இதை எடுக்கட்டா என்பதில் இருந்து கதைகள் எல்லாம் நிஜயமாகவே இருக்கும். கொஞ்சம் ஒட்டி நின்று சம்பாஷனையைக் கேட்டால். உலகில் கொரோனோ என்று ஒன்றுமே இல்லை எனத்தோன்றும். அல்லது மண்டை தட்டிப்போச்சோ என்று எண்ணவைக்கும்.

உண்மையில் இந்த வீடியோ சம்பாஷனைகள், முன்னர் வணிக நோக்கத்திற்கும். மற்றும் ஆசிரியர்கள் கலந்துரையாடலாகவும் மட்டுமே பாவனையில் இருந்தது. இப்ப இலங்கையில் தேங்காய் புளிஞ்சு மீன்குழம்பு வைச்சு முடியும் வரைக்கும் இருக்கும். இங்கு உடுப்புகள் தோய்த்து அயன் பண்ணி முடியும் வரைக்கும் தொடரும்.

இது இப்படி என்றால் சிங்கப்பூரில் ஒரு குற்றவாளிக்கு அவரது குற்றங்களை சூம்பண்ணி மரணதண்டனை கூட விதித்து விட்டார்கள்.

சிங்கப்பூரில் COVID-19 மேலும் பரவலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு இணங்க, நீதிமன்றங்கள் குற்றவியல் விவகாரங்கள் தொடர்பான விசாரணைகள் வீடியோ கான்பரன்சிங் மூலம் (video conferences) நடத்தி வருகின்றன. அதன்படி மலேசிய வாலிபர் [37] புனிதன்; கணேசன் போதைப் பொருள் கடத்தலுக்கு உடந்தையாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டார். 2011 ல் 28.5 கிலோகிராம் ஹெராயின் கடத்தலுக்கு அவர் உடந்தையாக இருந்தார். கடந்த மாதம் 15.05.2020 வெள்ளிக்கிழமை, உயர்நீதிமன்ற அதிகாரிகள், குற்றவாளி மற்றும் அவரது சட்டக் குழுவினருக்கு இடையிலான சூம் (Zoom ) அழைப்பு விசாரணை மூலம் அவருக்கு மரண தண்டனை விதித்தனர்.

நாம் விளையாட்டாக செய்யும் இந்த தொழில் நுட்பத்தை ஒரு அரசாங்கம் மரண தண்டனை வழங்கும் அளவிற்கு ஒரு குற்றவிசாரனைக்கும் பயன் படுத்துகிறது என்று எண்ணும்போது சற்று பயமாகவே உள்ளது.

வீட்டுக்குள் சும்மா எப்படி இருப்பது அதிலும் தமிழர் வாழ்வு எப்போதுமே சமூகம் சார்ந்தது. எந்த நாட்டில் நாம் வாழ்ந்தாலும் அந்த நாட்டவரை விட அதிக தொலை தூரம் வரை சென்று உறவுகளுடன் கொண்டாடுவது எமது தமிழ் இனமே.

சூம் பாட்டி சற்று நகைச்சுவையாக இருந்தாலும். நாம் மன அழுத்தம் அதிகரிக்காமல் இருக்க இவை அவசியாமாகிறது. நம்மை நாமே சற்று அலங்கரித்து மகிழாமல் வீட்டில்தானே இருக்கிறோம் என்று எண்ணி இருந்துவிட்டால். முடிவு தெரியாத இந்த இக்கட்டான நிலையில் நாம் காட்டுவாசிகள் போல் ஆகிவிடுவோம். தினமும் முகச் சவரம் செய்யும் நாம் அதனையும் மறந்துவிடுவோம்.

## மனமெங்கும் தேரோட்டம்...





ஸ்ரீ நவதுரக்காதேவி ஆலயம்...
(வுப்பெற்றால்– யோமனி)
Künefeld 63b - 42282
wuppertal-Grmany
கடந்த ஆண்டு 25.05.2019
தேர பவனி வரும் காட்சி
காணும்போது மனம்
எங்கும் தேரோட்டம்





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# கோழி முட்டை சைவமா, அசைவமா..?

**கோழிகள் முட்டையிட, சேவல் தேவையில்லை என்பது, உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்?**

தாயின் பாலைக் குடித்து வளரும் பாலூட்டிகளைப் போன்று, கோழிகளிலும் கருக்கட்டாத முட்டைகள் சூலகத்திலிருந்து தொடர்ச்சியாக வெளிப்படும். இந்த கருக்கட்டாத கருமுட்டைகள் சேவல் மிதிக்கும்போது வெளிவரும் விந்துகளுடன் சேர்ந்தால், அவை கருக்கட்டிய முட்டைகளாக வெளியேறும். சேவலின் விந்துகளுடன் சேராதவை கருக்கட்டாத முட்டைகளாக உருக் கொள்ளும். இந்த முட்டைக்குள் கரு உயிர் இருக்காது. பேட்டுக் கோழிகளை வெட்டும்போது உள்ளே வட்டவடிவ சின்னச் சின்ன மஞ்சள் நிற முட்டைகள் இருப்பதைக் கண்டிருப்பீர்கள். சேவல் கோளி, பேட்டை மிதிக்காவிட்டாலும் இவைகள் கருக்கட்டாத முட்டைகளாக தொடர்ந்து வெளியேறும்.

மனிதர்கள் உட்பட பாலூட்டிகளில், விந்துடன் இணைந்து கருக்கட்டாத முட்டைகள் அழிந்து, மாதவிடாய் காலத்தில் குருதியுடன் வெளிவரும். ஆனால் கோழிகளில் அப்படியல்ல. அவை கருக்கட்டாத, கரு உயிர் அற்ற முட்டைகளாக வெளியேறும். ஊரிலே கோழிக் குஞ்சு பொரிக்க, முட்டைகளை அடை வைக்கிறோம். அப்போது, சில முட்டைகள் குஞ்சு பொரிக்காது கூழாகின்றன. இங்கு கூழாகும் முட்டைகள் கருக்கட்டாத முட்டைகள். குஞ்சு பொரிக்கும் முட்டைகள் கருக்கட்டிய முட்டைகள்.

கோழிப் பண்ணைகளில் சிறிய கூடுகளில் வளரும் ஆயிரக்கணக்கான பேடுகளை, கிரமமாய் விசிற்பண்ணி சில்மிஷம் பண்ண, சேவலால் முடியாது. பண்ணைகளில் சேவல் வளர்கப்படுவதும் இல்லை. இதனால் பண்ணைகளிலிருந்து சந்தைக்கு வரும் முட்டைகளில் கருஉயிர் இருக்காது. ஆனால் மற்ற எல்லாச் சத்துக்களும், கருக்கட்டிய முட்டைகள் போன்று இருக்கும்.

பசுவிலிருந்து வரும் பாலுக்கும், பண்ணைகளிலிருந்து வரும் கருக்கட்டாத, கருஉயிர் அற்ற முட்டைகளுக்கும் வித்தியாசமில்லை. இவை பாலைப் போல புரதம், கொழுப்புச் சத்துக்கள் அடங்கிய சைவ முட்டைகள்.

முட்டைக்காக வளர்க்கப்படும் கோழிகள், கறிக்கோழி இனங்களல்ல.



ஆசி.கந்தராஜா (அவுஸ்திரேலியா)

கறிக்கோழி வளர்ப்பில் சேவலாக இருந்தாலென்ன பேடுகளாக இருந்தாலென்ன அவற்றின் சதைதான் முக்கியம். ஆனால் முட்டைக்காக வளர்க்கப்படுக் கோழிக் குஞ்சுகள் எல்லாமே பேடுகளாக வளரவேண்டும். முட்டையிடும் கோழி இனங்களில் சதைவளர்ச்சி இருக்காது. இவற்றை இறைச்சிக்காக வளர்த்து விற்பனை செய்தால் பண்ணைக்காரர் திவாலாகி விடுவார்.

கிராமங்களில் சேவல் கோழிகளையும் முட்டையிட்டு ஓய்ந்த பேட்டுக் கோழிகளையும் அடித்தே குழம்பு வைப்பார்கள். ஆனால் கறிக்கோழிகள் எனப்படும் புரொயிலர் கோழிகள் இனவிருத்தி செய்யப்பட்ட பின்பு எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. காரணம் புரொயிலர்கோழி இனங்கள் 45 நாள்களில் இரண்டு கிலோ வரை வளரக்கூடியன. இதற்குமேல் அற்றின் சதை வளர்ச்சி வெகுவாகக்



குறைந்துவிடும். இதனால் 45 நாள்களுக்கு மேல் கறிக் கோளிகளை வளர்ப்பது இலாபகரமானதல்ல. பண்ணைகளிலிருந்து சந்தைக்குவரும் புரொயிலர் கோழிகள் பெரும்பாலும் நாற்பத்தைந்து நாள்கள் உயிர் வாழ்ந்தவையே!

**உயிருடன் வாழ்ந்த நாள்களை விட உறைகுளிர்ப் பெட்டிகளில் இருக்கும் காலம் அதிகம்!**

இவைகள் உயிருடன் வாழ்ந்த நாள்களைவிட உறைகுளிர்ப் பெட்டிகளில் அதிக காலம் இருந்தவை என்பதே உண்மை. 32 நாள்களிலேயே இரண்டு கிலோ இறைச்சியை கொடுக்கக்கூடிய கறிக்கோழியை இப்பொழுது இனவிருத்தி செய்துள்ளார்கள். இந்த இனத்துக்கு கோப் (Cobb) என்று பெயர்.

கறிக்கோழிகள், அங்கிங்கு திரும்ப முடியாத சிறிய கூண்டுகளில் வளர்க்கப்படுவன. அவற்றைக் கூண்டுக்கு வெளியே விட்டால் அவற்றால் ஓட முடியாது. 32 நாள்களில் இரண்டு கிலோவரை வளரும் கோப் இன கறிக்கோழிகளின் கால்களால் அதன் உடல் பாரத்தை தாங்கமுடியாது விழுந்துவிடும். கூண்டுக்குள் இருந்தபடியே தீன் தின்னும் கோழியின் உடல்வளரும் வீதத்துக்கேற்ப இருதயம் வளர்வதில்லை. இதனால் கோளியின் சிறிய இருதயத்தால் பெரிய உடலுக்கு இரத்தத்தைப் பாச்ச முடிவதில்லை.

நாட்டுக்கோழிகள் 45 நாள்களில் கால் கிலோவும் தேறமாட்டது. ஆனால் பண்ணைகளில் வளர்க்கப்படும் புறொயிலர் கோழிகள் எப்படி இரண்டு கிலோ நிறைக்குமேல் விருத்தியடைகின்றன? என்ற கேள்வி நியாயமானதே.

வளர்ச்சிக்கான ஹோமோன்களை கோழித்தீனுடன் கொடுப்பது வளர்ச்சியடைந்த நாடுகளில் குற்றமாகும். இலங்கை இந்தியா போன்ற நாடுகளிலும் கோளித் தீனுடன் ஹோமோன்கள் கொடுக்கப்படுவதாகத்தெரியவில்லை. சதை வளர்ச்சிக்கான ஹோமோன்களின் விலை அதிகமாதலால் இது இலாபகரமானதல்ல. ஆனால் புறொயிலர்கோழி இனங்கள் விரைவில் சதைவைக்குமாறு இனவிருத்தி செய்யப்பட்டவை. இவற்றின் உடலுக்குள் விரைவில் சதைவளர்வதற்கான மரபணுக்களுண்டு. இந்த மரபுணுக்கள் நாளொன்றுக்கு 50 கிராமுக்கு மேலான சதையை வளர்க்கும் வகையில் ஹோமோன்களை கோழியின் உடலுக்குள் உற்பத்திசெய்யும்.

கறிக்கோகோழியின் தசைகளில் பாவிக்கப்படாது எஞ்சியிருக்கும் ஹோமோன்கள், கோழியை உட்கொள்ளும் மனித உடலிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாமென நம்பப்படுகிறது. இதனால்தான் பிள்ளைகளுக்கு அதிக கறிக்கோழி கொடுப்பது நல்லதல்ல என்றும் பெண்பிள்ளைகள் குறைந்த வயதில் பூப்படைவதற்கு இதுவும் ஒரு காரணமெனவும் சொல்லப்படுகிறது. ஆனால் இவை விஞ்ஞான ரீதியாக இன்னமும் நிரூபிக்கப்படவில்லை!





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# பிள்ளையள் ஒவ்வொரு நாளும் வருவினம்



குளிர் தாங்க முடியவில்லை. ஆச்சி கதிரையில் ஏறி அலுமாரிக்குள் மேல்தட்டில் இருந்த சுவற்றரை எடுத்திருக்கிறா. கதிரை தள்ளட்டா இல்லை! இல்லை!! ஆச்சி தள்ளாடக் குப்பிறவீழுந்து நாரியில் சரியன அடி.

நான் தூரத்துச் சொந்தமாக, இருந்தாலும் சின்ன வயதில் ஆச்சி எனக்குச்செய்த உதவியை மறக்காமல் சுகம் விசாரிக்க வீடு சென்றேன்.

ஆச்சி நாரி நோவிற்குள்ளும் சிரித்தபடி என்னை வரவேற்றா. பிள்ளைகள் எப்படி? என்ன செய்கிறார்கள். அவர்களும் உங்களுக்கு பக்கம் பக்கம்தான் இருக்கினம் என்று கேள்விப்பட்டேன்..

ஓம் பிள்ளை! நாலுபிள்ளைகளும் இங்கைதான் பக்கத்தில் இருக்கினம்.

ஒருத்தன் மட்டும்தான் கனடாவில். அவன் மட்டும் இடையிடைதான் வருவான் மற்ற நாலும் அடிக்கடி என்ன! ஒவ்வொரு நாளும் ஒருவர் மாறி, ஒருவர் வருவினம்.

அப்ப ஏன் ஆச்சி, பிள்ளையள் நிற்கும் நேரம் உந்தச் சுவற்றரை எடுப்பித்து போட்டிருக்கலாம் தானே.

பிள்ளையள்தான் எனக்கு குளிர் வதைப் பார்த்து, அம்மா சுவற்றரை எடுத்து போடுங்கோ என்று சொன்னவை.

அப்ப பிள்ளையள் நிற்கைக் கையே ஆச்சி விழுந்த நீங்கள். அப்ப ஏன் அவை வழுக்கைக்க பிடிக்கவும் இல்லையே! ஏன் எடுத்தும் தந்திருக்கலாமே!

ஓம் பிள்ளை! பிள்ளையள் நின்றவைதான். ஆனால் அவை நேரில் இல்லை ஸ்கைப்பில் நின்றவை.

அப்படி என்றால் ஒவ்வொரு நாளும் பிள்ளைகள் வருவினம் என்றது.

ஸ்கைப்பில்தானோ

பி.குறிப்பு. தாய்க்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரே தோசைக்கல்லில் ஒன்று முறுகல் ஒன்று நெய் ஒன்று மெல்லியது இப்படி எப்படி எப்படி சுட்டால் எந்தத் தோசை எந்தப் பிள்ளைக்குப் பிடிக்கும் என்பது அத்துபடி. ஆனால் பிள்ளைக்கு... அது நாம்தான் பதில் சொல்லவேண்டும்.



மாதவி

**(நன்றி : வெற்றிமணி 01.01.2013)**



# சமூக இடைவெளியும் இளையவர் மனநிலையும்...

சுதந்திரமாக இருந்தவர்கள் நம் இளையவர்கள். அவர்களின் வாழ்க்கை முறையே மாறிவிட்டது. கொரோனா என்ற நோயின் விளைவே இந்த மாற்றம். எதிர்பாராத விதமாக பல விடயங்களைக் கற்றுக்கொள்கின்றோம்.

பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் கட்டுப்பாடு இல்லாமல் இருந்தவர்களுக்கு இப்பொழுது 1,5 மீற்றர் இடைவெளியும், தெரிந்தவர்களுடன் தெரியாதவர்கள் போல் பழகுவதும் மிகவும் கடினமாக உள்ளது.



ரஜீனா தர்மராஜா

நண்பர்களுடனும் உறவினர்களுடனும் தொலைபேசி மற்றும் இணையத்தளம் ஊடாக மாத்திரமே உரையாட முடிகிறது. நேரில் சந்தித்து மனம் விட்டு பேச முடியாத ஒரு நிலை.

கூடுதலானவர்கள் வெளியே சென்று நண்பர்களுடன் கூடி உணவு உண்பது வழக்கம். ஆனால் ஆரம்பத்தில் உணவகங்களும் கடைகளும் பூட்டி இருந்த நேரம் அவர்களுக்கு வீட்டில் இருப்பதற்கு இலகுவாக இருக்கவில்லை. கல்வி படிப்பு என்று இருப்பவர்களுக்கு விடுமுறைக்கு வேறு நாடுகளுக்குச் சென்று அனைத்து பிரச்சினைகளை மறந்து மகிழ்ச்சியாக இருப்பதும் தற்போது செய்ய முடியாதது ஒன்று.

காதலிப்பவர்களும் சந்திப்பதும் சந்தேகம் தான்.

ஆனால் வெளியில் சென்று காற்று வாங்கி நடப்பதை நிறைய இளையவர்கள் செய்து வருகிறார்கள்.

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# கண்களின் பாதுகாப்பு பற்றிய சில தவறான நம்பிக்கைகள்



## Dr.IN

'இவள் எந்த நேரமும் டீவீக்கு முன்னாலைதான். கண்கெடப் போகுது எண்டு சொன்னாலும் கேக்கிறாளில்லை.'

'மம்மல் இருட்டுக்கை கிடந்து கொண்டு படிக்கிறான். லைட்டையும் போடுறானில்லை. கண் பூந்தப் போகுது.'



இவை நாம் அடிக்கடி கேட்கும் வார்த்தைகள்தான். இவற்றில் எவ்வளவு தூரம் உண்மையுண்டு?

கண்கள் எமது புலன்களில் மிக முக்கியமான ஒன்றாகும். கட்புலன் எமக்கு பிறக்கும் போதே இயல்பாகக் கிடைத்து விடுகிறது. நாளாந்தம் அதனுடனேயே வாழ்வதால் அது இல்லாத வாழ்வு பற்றி எவரும் யோசிப்பதே இல்லை. ஆயினும் ஏற்கனவே இருந்த பார்வையை இழந்த பின்னான வாழ்வின் துயரம் அளவிட முடியாததாகும்.

வயதாகும் போது பார்வையின் கூர்மை குறைவதற்கும், கண்நோய்கள் ஏற்படுவதற்குமான சாத்தியம் அதிகமாகும்.

ஆயினும் பார்வை இழப்பிற்கு வயது மட்டும் காரணமல்ல. எமது கவலையீனமும்,அக்கறையின்மையுமே முக்கிய காரணங்களாகின்றன. கண் வைத்தியரிடம் ஒழுங்கான கால இடைவெளியில் காண்பிப்பதன் மூலம் சுமார் 40 முதல் 50 சதவிகிதமான பார்வை இழப்புக்களை தடுக்க முடியும்.


எந்தவித வெளிப்படையான அறிகுறிகள் இல்லாவிடிலும் கூட 40 வயதிற்கு பின் கண் மருத்துவரிடம் காட்டி பரிசோதித்துக் கொள்வது அவசியமாகும். தமது குடும்பத்தில் அல்லது பரம்பரையில் கண் நோயுள்ளவர்களுக்கு இது மேலும் முக்கியமானதாகும்.

உங்கள் பார்வையில் குறைபாடு புலப்படும் மட்டும் கண் மருத்துவரை காண்பதைத் தள்ளிப் போட வேண்டாம். ஏனெனில் ஒரு கண்ணில் கோளாறு இருந்தாலும் மற்றைய கண் அதனை ஈடு செய்துவிடுவதால் நோயாளி அதனை உடனடியாக உணர மாட்டார். எனவேதான் கண்பார்வைக் கோளாறுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்க ஒழுங்கான மருத்துவப் பரிசோதனை அவசியமாகும்.

முதலில் மங்கலான வெளிச்சத்தில் வாசிப்பதை எடுத்துக் கொள்வோம். எம் பலரது நம்பிக்கைகளுக்கு முற்றிலும் எதிர்மாறாக குறைந்த வெளிச்சத்தில் வாசிப்பதால் பார்வைக்கு பாரிய பாதிப்பு எதுவும் ஏற்படுவதில்லை. ஆயினும் அவ்வாறு வாசிப்பதால் கண்கள் விரைவில் களைப்படைந்து விடும் என்பது உண்மையே.

வாசிக்கும் போது படிக்கும் ஒளிவிளக்கின் வெளிச்சம் தாளின் மேல் நேரடியாக விழுவதே சிறந்ததாகும். முதுகிற்குப் பின்னிருந்து உங்கள் தோள்களுக்கு மேலாக வெளிச்சம் வாசிக்கும் தாளில் விழுவது சிறந்ததல்ல. அதேபோல ஒளி

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்



விளக்கு உங்களுக்கு முன் இருப்பதும் நல்லதல்ல. சுற்றிவர ஒளி பரவ முடியா மறைப்பினால் (Shade) மூடப்பட்டு, வெளிச்சம் நேரடியாக உங்கள் புத்தகத்தின் மீது மட்டும் விழ வைக்கும் மேசை விளக்கே (Table Lamp) நல்லதெனலாம். பார்வைக்



குறைபாட்டிற்காக கண்ணாடி அணிபவர்களில் பலர் அதனைத் தொடர்ந்து அணிந்தால் மேலும் விரைவாகப் பார்வை பழுதாகிவிடும் என எண்ணுகிறார்கள். இடையிடையே அதனைக் கழற்றி கண்ணுக்கு ஓய்வு அளிப்பது நல்லது என நினைக்கிறார்கள். இதுவும் ஒரு தவறான கருத்தே.

வாசிப்பதற்காக அல்லது தூரப் பார்வைக்காக உங்களுக்கு கண்ணாடி தரப்பட்டிருந்தால் அதனை அணியாதிருப்பது நல்லதல்ல. கண்ணாடி இல்லாது கண்ணைச் சுருக்கி, சிரமப்படுத்தி வாசிப்பதும், தூர உள்ள பொருட்களைப் பார்க்க முயல்வதும் (உதா- ரீவீ பார்ப்பது, பஸ் போர்ட் பார்ப்பது) உங்கள் கண்களுக்கு வேலைப்பளுவை அதிகரித்து சோர்வடையச் செய்யும். தொடர்ந்து கண்ணாடி அணிந்திருப்பது உங்கள் பார்வைக் குறைபாட்டை அதிகரிக்கச் செய்யாது. அதேபோல வேறு கண் நோய்களையும் கொண்டு வராது. கரட் சாப்பிடுவது கண்ணுக்கு நல்லது என்பது எல்லோரதும் நம்பிக்கையாகும். இது ஓரளவு மட்டுமே உண்மையாகும்.

கரட்டில் விட்டமின் A இருக்கிறது. இது விட்டமின் A குறைபாட்டினால் வரக் கூடிய கண் நோயைத் தடுக்கும் என்பது உண்மையே. கண்ணுக்கு வேறு பல விற்றமின்களும் தேவைப்படுகின்றன. கரும் பச்சை நிறமுடைய கீரை வகைகள், மற்றும் பழவகைகளில் விட்டமின் A யுடன் ஒட்சினெதிரிகள் (Antioxidents) என்று சொல்லப்படுகின்ற விட்டமின் C, E யும் இருப்பதால் மேலும் நல்லதெனலாம். இவை கட்டரக்ட், வயதாவதால் ஏற்படும் மக்கியுலர் பாதிப்பு (cataract and age-related macular degeneration) ஆகியவற்றையும் தடுக்கும் ஆற்றல் கொண்டவை.

நன்றி: தமிழர் தகவல் கனடா

28 ஆம் பக்கம் பார்க்க...



# அஜகர்ணமும் கோகர்ணமும்


கௌசி

அறிவு என்பது நியாயப்படுத்தப்பட்ட உண்மையான நம்பிக்கை என தத்துவஞானி பிளேட்டோ கூறுகின்றார். இதில் மொழி அறிவு இருக்கும் பட்சத்தில் நியாயப்படுத்தலைத் தேடிப் பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. மொழியறிவை எடுத்து நோக்கும் போது அதன் தேவைப்பாடும், பிரதியீட்டுத் தன்மையும் தற்காலத்தில் அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆங்கில மோகம் மக்கள் மத்தியில் அதிகரித்திருந்தாலும், அவ் ஆங்கிலத்தின் பூரண இலக்கண அறிவு இன்மையாலும், பாவனைப்பாடு இன்மையாலும் அச்சத்தின் மத்தியில் ஆங்கிலப் பயன்பாடு எம்மவரிடையே பயன்பாட்டில் குறைவு என்றே சொல்லலாம். தமிழின் ஆரம்பக் கல்வி அறிவும், மக்கள் தொடர்பாடலும் அதிகமாக இருக்கின்ற பட்சத்தில் தமிழின் ஆக்கப்பாடுகள் அதிகரித்திருப்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

மொழிக்கல்வி இன்றி விஞ்ஞானம், கணிதம் கற்பவர்கள் தம்முடைய கற்கைப் பாடநெறிக்கேற்ப தொழிலில் அமர்ந்து அந்தப் பணியில் மாத்திரமே முழுக் கவனத்திலும் ஈடுபடுவார்கள். சமூக சிந்தனையோ, வாழ்க்கை நெறிமுறைகளோ, மொழிப்பற்றோ, இனப்பற்றோ எதுவுமே தேவைப்படாது. ஆனால், கால ஓட்டத்தில் வாழ்க்கையின் இறுதிக் காலப்பகுதியில் மொழியில் தஞ்சம் அடைவதும், மொழியறிவை நாடி ஓடுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. எதை வாசித்தாலும் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது. மனதில் எழுகின்ற கருத்துக்களை சரியான வகையில் எடுத்துச் சொல்ல மொழியறிவு குறைவாக இருப்பதனால், விளக்கிச் சொல்லவும், விளங்கிக் கொள்ளவும் இயலாமல் இருக்கின்றது என கவலைப்படுகின்றவர்களை இப்போது அறியக் கூடியதாக இருக்கின்றது.

இருப்பினும் காலம்கடந்து மொழிப் பயன்பாட்டில் ஆர்வம் ஏற்படல் பாராட்டப்பட வேண்டியதே, அத்துடன் அவ் ஆர்வமானது மொழிப்பயன்பாடு அதிகரிப்பதற்குக் காரணமாக அமைகின்றது என்பதை ஏற்றுக்கொள்ள முடிகின்றது. ஆனால், அம்மொழிப் பயன்பாட்டிலே பலவித குறைகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இது மொழி அழிவுக்குக் கூடக் காரணமாக அமைகின்றது. தவறுகளைச் சுட்டிக்காட்டும் பட்சத்தில் தற்போது பரவாயில்லை எல்லோரும் இப்படித்தான் பயன்படுத்துகின்றார்கள் என்று இலக்கணவழுக்கள் நிறைந்த பல சொற்களைப் பயன்படுத்தும் போக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நடைமுறையாகும்.

சமூகவலைத் தளங்கள் பல தவறான செய்திகளைப் பரப்புவது மட்டுமல்லாமல் தமிழ் கொலைகளையும் தாராளமாக செய்கின்றன. இத்தவறுகளைத் திருத்துவதற்கு வழி உண்டா? என்றால் இருக்கிறது. தவறுகளைச் சுட்டிக் காட்டுபவர்கள் சொல்வதைக் கேட்டுத் திருத்துவது. பசுமாட்டின் உடலில் எந்த இடத்தில் விரலால் தொட்டாலும் அந்த இடத்தில் உணர்ச்சி வசப்பட்டு சிலிர்க்கும் அதுபோல அறிவாளிகள் எந்தச் சிறுகுறையைச் சுட்டிக் காட்டினாலும் புரிந்து கொண்டு மன்னிப்புக் கேட்டுத் திருந்துவார்கள். இவர்களை கோகர்ணம் போடுபவர்கள் என்று அழைப்பார்கள். அவர்கள் கூறியது சரியா என்று ஆய்வு செய்து திருந்த வேண்டும். அதை விடுத்து ஆட்டின் வாலைப் பிடித்து இழுத்தால் அது தன் தலையை தொங்கப் போடும் அதுபோல




சிலர் தங்களுடைய குறையை யாராவது சுட்டிக் காட்டினால், அவர்களை வெறுப்பார்கள். இவர்களை அஜகர்ணம் என்பார்கள். இவ்வாறு அஜகர்ணமாக இருக்கும் பட்சத்தில்; தமிழானது தூசியும் அழுக்குகளும் கலந்த தேநீரை அருந்துவது போன்ற நிலைக்கு ஆளாகிவிடும்.

கட்டுரைச் சுருக்கம் கருதி தவறாகத் தமிழைப் பயன்படுத்துவதற்கு ஒரு உதாரணத்தை மட்டும் கூறலாம் என்று இருக்கின்றேன். வாழ்த்துக்கள் என்று எழுதுவது சரியா? வாழ்த்துகள் என்று எழுதுவது சரியா? என்றால், எல்லோரும் வாழ்த்துக்கள் என்று எழுதுகின்றார்கள். அதனால், நானும் எழுதுகின்றேன் என்று கூறிவிட முடியாது. உதாரணத்திற்கு தோப்புக்கள் என்றால், தோப்பில் இருந்து எடுக்கப்படும் கள் எனப் பொருள்படும். தோப்புகள் என்றால், பல தோப்பு எனப் பொருள்படும். அதே போல் வாழ்த்துகள் என்பதில் வாழ்த்து பன்மையில் வந்திருக்கின்றது. வாழ்த்து என்பது கள் என்னும் பன்மை விகுதி பெற்று வருகின்றது. வாழ்த்துக்கள் என்னும் போது வாழ்த்து என்னும் சொல்லானது கள் என்னும் பொருளுடன் சேர்ந்து வருகின்றது. விகுதிக்கும் சொல்லுக்கும் வேறுபாடு அநேகமாக எல்லோரும் அறிந்திருப்பார்கள் என்றே நினைக்கின்றேன்.

ஆத்மார்த்தமாக மனதுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவரும் கல்வி என்பதைத் தவிர்த்து மொழியறிவு அனைத்து அறிவையும் மனிதர்களுக்குக் கொண்டு வந்து சேர்க்கும் என்பது அனுபவப்பட்ட போதே அனைவரும் அறிந்து கொள்ளுகின்றார்கள். நான் யார்? எனது மொழி என்ன? எனது வாழ்வின் தத்துவம் என்ன? எனது உடலின் அமைப்பு எப்படி இருக்கின்றது? உடலுக்குத் தேவைப்படும் அத்தியாவசிய காரணிகளும் உணவுமுறைகளும் எவை? எம்மைச் சூழவுள்ள நிலப்பரப்பும், மக்களும், அவர்கள் வாழ்க்கை முறையும், அவர்களுக்கும் எங்களுக்கும் உரிய தொடர்புகளும் எவை? எம்மைத் தாங்கும் பூமி, அது வலம்வரும் அண்டவெளி, இதன் உருவாக்கம், அதில் ஏற்படும் மாற்றங்கள்? இவ்வாறான கல்விமுறைகளும், இவ்வாறு கற்றவற்றை எவ்வாறு பிரதியீடு செய்யலாம்? எவ்வாறு பிறருக்கு எடுத்துரைக்கலாம்? அதற்குப் பயன்படும் தொழில்நுட்பங்கள், அவற்றை எவ்வாறு கற்றுக் கொள்ளலாம்? கற்றதை எவ்வாறு பயன்படுத்தலாம்? இதற்கு எவற்றினுடைய யாருடைய உதவிகளைப் பெறலாம் என்று தேடித் தேடிப் பெறும் அறிவுதான் எம்மை அறிவாளிகளாக மாற்றுவதற்கு தூண்டல்களாக அமைகின்றன.

மொழியறிவு கற்பது மட்டுமன்றி அத்துடன் பலதும் கற்கும் ஆர்வம் மட்டும் இருந்து விட்டால் அம்மனிதனின் வாழ்க்கை என்பது சொர்க்கம் என்பதைப் பலரும் காலம் கடந்தே அறிந்து கொள்ளுகின்றார்கள். மொழியறிவு பெற்ற ஒருவர் பல விடயங்களைத் தேடிக் கற்பதுடன் மட்டுமன்றி அவற்றைத் தெளிவுபட விரித்துரைப்பதிலும் வல்லவராகின்றார். அறியும் சக்தியைப் போன்றதொரு கண் இல்லை. அறியாமையைப் போன்றதொரு குருடு இல்லை என்று மூனா அவர்கள் கூறியிருக்கின்றார். வெறுமனே அறியும் சக்தி இருந்து விட்டால் மட்டும் போதாது, அதனைப் பற்றி ஆழமான அறிவைப் பெறுதலுக்குத் தேடல் அவசியம் என்பதும் அவசியமாகின்றது. அறிவைப் பெற ஐயுறுதல் அவசியம். அறிவியல், தத்துவவியல், மெய்யியல், என பரந்துபட்டு விரியும் அறிவைப் பெற ஆயுள் போதாது என்பது உண்மையே. ஆயினும் பெற்ற மொழியறிவைக் கொண்டு வெறுமனே கற்பனை உலகில் வாழ்வதைவிடுத்து அறிவியலையும் கொஞ்சம் கற்றுப் பார்த்தால் வாழ்க்கை ஆச்சரியமானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் அமையும்.

**(உதவிக்கரம்:
பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ)**




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# குடும்ப உறுப்பினர்களின் நீண்ட தொடர்பு

## பதின்ம வயதினருக்கு மன உளைச்சலை தரலாம்

**தொற்றுநிலை காலகட்டத்தில் குழந்தைகள், இளையவருடன் தொடர்பாடல் !**

சமூக இடைவெளியை கடைபிடிக்கும் கட்டாயத்தில் இருக்கும் இந்த காலம், குழந்தைகள் மற்றும் பதின்மவயதினருக்கு ஒரு கடினமான விடயமாக இருக்கலாம். சில சிறு குழந்தைகளுக்கு பாடசாலை ஏன் மூடப்பட்டிருக்கிறது, பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஏன் ஈடுபடமுடியாமல் இருக்கிறது, நண்பர்களை ஏன் பார்க்கமுடியவில்லை என்றெல்லாம் புரிந்துகொள்வது கடினமாக இருக்கும். சமூகவலைத்தளம் ஊடாகவும் நண்பர்கள் மூலமாகவும் வந்து குவியும் தொற்றுநிலை பற்றிய செய்திகள், அவர்களுக்குள் பயத்தையும் பதட்டத்தையும் உருவாக்கலாம். பெற்றோரின் பதற்றமும் கவலையும், இளையவர்களை இலகுவில் பாதிக்கும். அவர்கள் தம் உடல் நலம், மற்றவர் நலம் பற்றி எல்லாம் கவலை கொள்ள ஆரம்பிக்கலாம்.

**எம் பிள்ளைகளின் வயதுக்கு தக்கவாறு அவர்களை தைரியப்படுத்துவது அவசியம். இதற்கு என்ன செய்யலாம்?**

### குழந்தைகளுக்கு

அவர்கள் உணர்வுகளை அங்கீகரியுங்கள்.

நோய் வருவதற்கான சாத்தியக்கூறு பற்றியும், நோய் தொற்றினால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விளக்குங்கள் .

அவர்களையும் உங்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க என்ன செய்கிறீர்கள் என்பதை அவர்களுக்கு விளக்குங்கள். அவர்கள் கேள்விகள் பற்றி அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

தொலைக்காட்சி மற்றும் சமூகத்தள பாவனையை கண்காணித்துக்கொள்ளுங்கள்.

குழந்தைகள் மனதை வலிமையூட்டும் விதத்தில் விடயங்களில் ஈடுபடுத்துங்கள். ஆரோக்கியம் சார்ந்த தகவல்களை பகுத்தறிந்து, நம்பிக்கையான இணையதள பக்கங்களை அடையாளம் காண உதவுங்கள்.



சலிப்பை குறைக்க, ஆரோக்கியமான நாளாந்த கால அட்டவணையை ஏற்படுத்துங்கள். விரும்பத்தகாத பழக்கவழக்கங்களை கண்டிக்க, குறைந்த சொற்களில், இயலுமான வரை உணர்வுகளை சமநிலையில் வைத்துக்கொண்டு, அவர்கள் செய்த பிழையை எடுத்துக்கூறுங்கள். அந்த இடத்தில் இருந்து அவர்களை வெளியேற்றி (time-out) வையுங்கள். ஒரு வருட வயதிற்கு ஒரு நிமிடப்படி இந்த வடிஅந-ழரவ இனை நீங்கள் நிர்ணயிக்கலாம்.



Dr. Pushpa Kanagaratnam
Ph.D. C. Psych.
Clinical Psychologist

பிள்ளைகள் சிலநேரம் தெரியாமல் தவறு செய்யலாம். அவர்களுக்கு வழிகாட்டல் தேவைப்படலாம். இதற்கு, வேறு ஒரு விடயத்தில் அவர்களை நீங்கள் ஈடுபடுத்தலாம்.

சில நேரங்களில், பிள்ளைகள் செய்யும் தவறுகளை கவனிக்காமல் விடும்போது, தாமே அதன் விளைவுகளை புரிந்து, பழக்கவழக்கத்தை நிறுத்திக் கொள்வார்கள். நல்ல பழக்கவழக்கங்களை அங்கீகரியுங்கள். பாராட்டுங்கள். உங்கள் எதிர்பார்ப்புகளை தெளிவு படுத்துங்கள்.

அடிப்பது மற்றும் உடல்-தண்டனையை தவிர்ப்பது முக்கியம். அடிப்பது, காலப்போக்கில் குழந்தைகளை கோபமுள்ளவர்களாக மாற்றும். அத்தோடு அவர்களுக்கு சுய கட்டுப்பாட்டையும் சரியான வழிமுறைகளையும் கற்றுத்தராமல் போய்விடும்.



### பதின்ம வயதினருக்கு

சமூக இடைவெளியின் முக்கியத்துவத்தை பதின்மவயதினருக்கு எடுத்துக்கூறுங்கள். இணையத்தள தொழில்நுட்பம் மூலம் நண்பர்களுடன் தொடர்பில் இருக்க ஊக்கப்படுத்துங்கள்.

மது மற்றும் போதை நாட்ட ஈடுபாட்டை குறைக்க°நிறுத்த ஆதரவளியுங்கள். அறிகுறிகள் இல்லாமலேயே தொற்றை காவும் ஆபத்து இருப்பதால், நண்பர்கள் நலமாக இருக்கிறார்கள் என்று நாம் உறுதியாக இருக்கமுடியாது என்பது அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். தொடர்ந்து பாடசாலைக்கல்வியை இணையத்தளம் மூலமாக தொடர்பவர்களுக்கு, யதார்த்தபூர்வமான நேர அட்டவணையை கடைபிடிக்கவும், ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு, உடல்பயிற்சி போன்ற விடயங்களுக்கு நேரம் ஒதுக்கவும் உறுதுணையாக இருங்கள்.

மன உளைச்சலை குறைக்க ஆழ்ந்த நித்திரை, கிரமமான உடல்பயிற்சி, ஆரோக்கியமான உணவு முக்கியம்.

குடும்ப உறுப்பினர்கள் தொடர்பு நாளும் பொழுதும் நீடித்திருப்பதும் பதின்ம வயதினருக்கு மன உளைச்சலை கொடுக்கும் விடயமாக இருக்கலாம். பிள்ளைகள் சுதந்திரம், அதேநேரம் கிரமமான நாளாந்த நடவடிக்கைகள், என பெற்றோர்கள் சிந்தித்து திட்டமிட வேண்டும்.

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# இந்த உலகம் மனிதனுக்கு மட்டுமா?



அன்னை வயிற்றில் இருந்தபோதே அவள் உண்டதையும் ஈர்த்து வளர்ந்து பின் பிறந்து அறுசுவை, தீங்கனிகள் மற்றும் மதுரசம் என தித்திக்க உண்டுறங்கிக் கழித்து, மீண்டும் வயிறு பசி எடுக்க இயற்கையை எதிர்பார்த்து அதனிடம் கையேந்தும் மனிதனை என்றைக்கும் ஒட்டுமொத்த இயற்கையும் ஏமாற்றியதில்லை. இருந்தாலும் மனிதன் மட்டுமே அதன் குழந்தையும் இல்லை. இந்த இயற்கை தன் வளத்தை பேணுவதற்கென, சமநிலை சரியாக இருப்பதற்காக சில சிறப்பம்சங்களை வைத்தே ஒவ்வொரு படைப்பினையும் உருவாக்கியுள்ளது, தனக்குள்ளும் சட்டதிட்டங்களோடே இப்பூமி சூரியனை வலம்வருகின்றது .

உதாரணமாக ஒரு மரமானது தனது இனமும் இம்பூமியில் எங்கும் பரந்து வாழ தன்னை பரப்ப வேண்டியுள்ளது. சில தாவரங்களினுடைய வித்துக்கள் காற்று மற்றும் நீரினால் எடுத்துச் செல்லப் படத்தக்கது. தவிர்ந்த ஏனைய வித்துக்களையுடைய தாவரங்களுக்கு ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்கு எடுத்துச் சென்று பரப்புவதற்கு நகரக்கூடிய உயிரிகளே உதவியாக இருக்கும். இருப்பினும் வெறுமனே அந்த உயிரிகளை தன் தேவைக்காக பயன்படுத்தாமல் அந்த வித்தினை சுற்றி காய் வளர்த்து அந்த வித்து தயாராகும் வரை இனிய சுவையற்ற காய் பதத்திலே வைத்திருந்து பின் அந்த வித்து முளைப்பதற்கான பதம் வந்ததும் அதன் வெளியே காயினை இனிய கனியாக்கி அதனை எடுத்துச் செல்லும் உயிரினத்திற்கு சூரிய ஒளியில் சமைத்த சுவையான உணவாகிய கனியை கொடுத்தே விதையை கையளிக்கிறது. இதுதான் இயற்கையின் உன்னதம். இந்தத் தொடர் நிகழ்வினை மனிதன் தவிர்ந்த பிற விலங்குகள் சரியாக கடைப்பிடிக்கின்றன எனலாம். இயற்கையின் எதிர்பார்ப்பு இன்றைய நாகரிக மனித வாழ்வில் எப்படி முடிகிறது என்பதை உணர்ந்தால் வெட்கித் தலைகுனிவை ஏற்படுத்தும்.

மரத்தில் தொடங்கி மனிதன் வரை அத்தனை விடயங்களையும் மனிதனே உடமை கொள்ள விரும்புகிறான். அவன் அடைந்தவற்றின் மீதுள்ள அலட்சியமும், அடையத் துடிப்பதன் மீதுள்ள அழுத்தமும் இயற்கையில் பாதிப்பை ஏற்படுத்தி எதிர் விளைவுகள் ஏற்படுகின்றன.



கரிணி

சிறு பூச்சிதானே என நாம் அலட்சியமாகப் பார்க்கும் தேனீக்களின் இனம் அழிந்துவிட்டால் குறுகிய காலத்தில் மனித இனமும் அழிந்துவிடும் என ஆய்வில் கூறப்படுகிறது. இன்று கதிரியக்க கோபுரங்கள் மற்றும் பல அதிர்வுகள், பேரிரைச்சல்கள் காரணமாக இத்தேனீக்கள் பெருமளவு அழிந்து வருவதால் தாவரங்களுக்கு இடையேயான மகரந்தச் சேர்க்கை வெகுவாக குறையும். இதனால் தாவரங்களும் பெருமளவாக அழிந்துவிடும். பிறகென்ன மனிதன் மட்டுமன்றி இயற்கையை அண்டி வாழும் அத்தனை உயிரினங்களும் பேரழிவை சந்திக்க வேண்டி வரும். நகரப்புறங்களில் வளர்க்கும் காய்கறித் தோட்டங்களில் செடிகள், மரங்கள் அதிக பூக்களை பூத்தாலும் அவை பின் மகரந்தச் சேர்க்கையின்றி உதிர்ந்துவிடும் இதனால் அதிக காய், கனிகளைப் பெறமுடியாமல் போவதை கண்கூடாக காணலாம்.

தின்று தீர்த்த உணவின் சமிபாட்டுக் கழிவுகளை மண்ணோடு சேர்த்தால் அடுத்த நிமிடமே அது மண்ணோடு சமிபாடடையும் வேலை நடைபெறத் தொடங்கும். இதுதான் படைப்பு. இன்று எத்தனை நாள் அதனை வயிற்றில் கட்டிவைத்து பின் தொட்டிகளில் அடைத்து, பின் இறப்பர் குழாய்களில் அடைத்து. பலநாட்களின் பின் கொடுமையானதொரு பொருளாக்கிவிட்டு இயற்கையின் கரங்களில் கொடுத்தால் அது என்ன செய்யும். ஆற்றில், குளத்தில், கடலில் உள்ள பிராணிகள் இந்த பெயரிடப்படாத பொருளை எப்படி ஏற்று உயிர் வாழும். மனிதக் கழிவுகள் மட்டுமன்றி தொழிற்சாலைகளின் இயந்திரக் கழிவும் சேர்ந்தே கூட்டு அழிவை மேற்கொள்கின்றன. மண்ணினால் சமிபாடடைய முடியாத பொலித்தீன் பொருட்களை உபயோகிக்க கூடாது என்ற விழிப்புணர்வினை ஏற்படுத்தும் சட்டத்தினால் ஏன் அதனை தடை செய்ய முடியவில்லை என்பது பௌதீகத்தின் மேலுள்ள கரிசனையற்ற தன்மையினைக் காட்டுகிறது. இரசாயனக் கழிவுகள், அதிகப்படியான புகை, காடழிப்பு என நீண்டு செல்லும் மனிதனின் அலட்சியப் போக்குகள் சிறு புற்கள் தொடங்கி மண்புழு, வண்டு, பூச்சி, மீன், பறவை, விலங்குகள் என அத்தனை உயிரினங்களுக்கும் மிகப் பெரும் இடைஞ்சலாகிவிட்டது.

அணுகுண்டு தயாரிப்பில் நாட்டுக்கு நாடு போட்டியிட்டுக் கொண்டிருக்க ஏற்கனவே தயாரித்து வெற்றி கண்ட நாடுகள் அதனை வைத்து பிற நாடுகளை மிரட்டிக் கொண்டிருக்கிறது. நூறு வருடங்களுக்குள் வாழ்ந்துவிட்டு இவ்வுலகை விட்டே சென்றுவிடக் கூடிய ஒரு தலைமுறையானது இப்பூமியில் ஏனைய உயிரினங்களுக்கும், இனி வரும் தலைமுறைக்கும் காலாகாலமாக சிதைவை ஏற்படுத்தக்கூடிய ஒரு செயலை எவ்வாறு உருவாக்கலாம்? இனி பிறக்கப்போகும் தலைமுறைக்கும், இப்போது அணுகுண்டை உருவாக்கி யுத்தத்துக்கு தயாராகி இருப்பவர்களுக்குமிடையே என்ன பகை? இது எத்தகைய ஈனச் செயல். இப்பூமியில் இப்படிப்பட்ட பாரிய இயற்கை சிதைவை ஏற்படுத்த மனிதனுக்கு என்ன அதிகாரம் உள்ளது?

இப்புவியில் படைக்கப்பட்ட ஒவ்வொரு விடயமும் இயற்கை சமன்பாட்டில் முக்கிய பங்காற்றுகிறது. அதனை தகர்க்கும் மனித செயற்பாடுகளில் இருந்து விழிப்புணர்வு பெற வேண்டும். இயற்கையினை பாதுகாக்க ஒவ்வொரு தனி மனிதனும் அக்கறை எடுக்காதவிடத்து அதன் எதிர் விளைவுகளை தானும் அனுபவிப்பது மட்டுமன்றி இவ்வுலகை நம்பி வாழும் எல்லா உயிரினங்களுக்கும் தீங்கினை ஏற்படுத்தும் என உணர வேண்டும். அது தவிர இந்த இயற்கை தன் சமநிலையில் சரிவை சந்திக்கும் போது அதை சரிசெய்வதற்காக நிச்சயம் பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்தும். அப்போது இயற்கையினால் மனிதருக்கு விழும் சவுக்கடிகள் அப்பாவி உயிர்களையும் சேர்த்தே தாக்கக் கூடும்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




கலாசூரி
திவ்யா சுஜேன்

# மரணத்தை வெல்லும் வழி

**அத்வைத நிலைகண்டால் மரணமுண்டோ?**

*பொன்னார்ந்த திருவடியைப்*
*போற்றி யிங்கு*
*புகலுவேன் யானறியும்*
*உண்மை யெல்லாம்;*
*முன்னோர்கள் எவ்வுயிரும்*
*கடவுள் என்றார்,*
*முடிவாக அவ்வுரையை*
*நான்மேற் கொண்டேன்;*
*அன்னோர்கள் உரைத்ததன்றிச்*
*செய்கை யில்லை*
*அத்வைத நிலைகண்டால்*
*மரணமுண்டோ?*
*முன்னோர்கள் உரைத்தபல*
*சித்த ரெல்லாம்*
*முடிந்திட்டார்,மடிந்திட்டார்,*
*மண்ணாய் விட்டார்.*

மெய் ஞானத்தை அடைய வேண்டும் எனில் முதலில் இருளை நீக்கி ஒளியைத் தரவல்ல குரு அவசியம் என்று நாம் அறிவோம். ஞானத்தின் மூலமாய் தெய்வ சக்தி வெளிப்படும் இடமாக விளங்கும் குருவின் திருவடிகளை முதலில் தியானிக்க வேண்டும். இதனையே மாணிக்க வாசகர் 'குருமனிதன் தாள் வாழ்க' என்றும் திருநாவுக்கரசர் 'பூக்கை கொண்டு அரன் பொன்னடி' என்றும் மற்றும் பல ஞானியரும் திருவடிகளை முதலில் பணிந்து போற்றினர். அவ்வாறு குரு பாதத்தை வணங்கி நிற்க குருவின் சக்தியை நாம் உள்வாங்கி கொள்ளும் வல்லமை உண்டாகும். சக்தி என்பது ஜோதி வடிவமாய் நிறைந்தது. பொன் போல ஜொலிக்கின்ற ஜோதி வடிவமான திருவடிகளை போற்றி பணிந்து, அந்த தெய்வ சக்தியை தம்முள் ஏற்றிக்கொண்டு , தன் அறிவில் உள்வாங்கிக்கொண்ட இப்பிரபஞ்ச நியதிக்கு உண்மையான விடயங்கள் எல்லாவற்றையுமே எடுத்து உரைக்க முயல்கிறார் யோக சாதகராய் விளங்கிய பாரதி. இதனையே பொன்னார்ந்த திருவடியைப் போற்றி யிங்கு புகலுவேன் யானறியும் உண்மை யெல்லாம் என்ற அடிகள் குறித்து நிற்கின்றன.

குருவின் திருவடிகளை சிரசில் ஏற்று தியானித்து , நம்முள் உள்ள ஜோதியை எழுப்பி , அகத் தேடலின் விளைவாக புருவ மத்தியில் உயிர் ஜோதியை உணரும் போது நம் உடலில் உள்ள உயிர் இறை தன்மையை அடைகிறது. 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' அதாவது நான் பரம்பொருளாக இருக்கிறேன்' என்ற உபநிடதத்தில் குறிப்பிடப்பட்ட மகா வாக்கியத்தினூடும் இதனை அறிகிறோம். அதனால் எல்லா உயிர்களும் கடவுள் என்று அத்வைத வேதாந்திகள் குறிப்பிடுவர். அவ்வாறு படைப்பின் சூட்சுமங்களை நன்கு உணர்ந்த ஞானியர் பலர் இருந்ததை நாம் அறிவோம். அப்படி வாழ்ந்த முன்னோர்கள் எல்லா உயிரும் கடவுள் என்று சொன்னதை நானும் உண்மை என்று கருதிக் கடைபிடிக்கிறேன் என்று சொல்கிறார் எழுத்தும் எழுதுகோலும் கூட தெய்வம் என்று சொன்ன பாரதி. இதுவே முன்னோர்கள் எவ்வுயிரும் கடவுள் என்றார்,முடிவாக அவ்வுரையை நான் மேற் கொண்டேன்; என்ற அடிகளின் விளக்கம்.

பரம்பொருள் ஒன்றே அனைத்து ஜீவராசிகளுக்குள்ளும் இருக்கிறது என்ற ஞானத்தை அனுபவத்தில் அடைந்துவிட்டால், நம் குறைகள் யாவும் நீங்கி நிறைவான ஆனந்த சத்தியமாய் ஆகி விடுவோம் என்பதை அத்வைத தத்துவமாய் ஆதி சங்கரரும் உபதேசித்துள்ளார். இவ்வாறு நம் முன்னோர்கள் சொல்லி வைத்த உண்மையை தவிர மரணத்தினை வெல்ல வேறு வழி எதுவும் இல்லை.

யாவும் ஒன்று என்ற அத்வைத நிலையினை அடைந்தால் மரணம் வருமா ? மனிதர்களே உங்களுக்கு குறையும் இருக்காது , இறப்பும் இருக்காது. இது எவ்வாறு சாத்தியம் என்று கூறுகிறேன் கேளுங்கள் என்று உரக்க சொன்ன பாரதியின் மரணத்தை வெல்லும் வழி என்ன என்று பார்ப்போம்.



*நாணத்தைக் கவலையினைச்*
*சினத்தைப் பொய்யை.*
*அச்சத்தை வேட்கைதனை*
*அழித்து விட்டால்*
*அப்போது சாவுமங்கே*
*அழிந்து போகும்;*
*மிச்சத்தைப் பின்சொல்வேன்,*
*சினத்தை முன்னே*
*வென்றிடுவீர், மேதினியில்*
*மரணமில்லை;*
*துச்சமெனப் பிறர்பொருளைக்*
*கருத லாலே,*
*சூழ்ந்த தெலாம் கடவுளெனச்*
*சுருதி சொல்லும்*
*நிச்சயமாம் ஞானத்தை*
*மறந்த லாலே,*
*நேர்வதே மானுடர்க்குச்*
*சினத்தீ நெஞ்சில்.*

இந்த லௌகீக வாழ்க்கைக்குள் கட்டி போட்டு, தெய்வத் தன்மையை அடைய விடாது அசுரர்களாக ஆக்க வல்லன நாணம் ,கவலை, கோபம், பொய், அச்சம் , ஆசை போன்ற செயல்கள். இவை நம்முள் எழாமல் செய்து அழித்து விட்டால் அந்த கணத்தில் மரணமும் அழிந்து போய்விடும்.

இது எவ்வாறு சாத்தியம் ? நம் மனதில் இருந்து இந்த அசுரர்களை வெளியேற்ற என்ன செய்ய வேண்டும் ? என்று பல கேள்விகள் நம்முள் எழலாம். அதற்கெல்லாம் நெற்றியில் அடித்தால் போல பாரதி என்ன சொல்லுகிறார் தெரியுமா ?

முதலில் கோபத்தை முற்று முழுதாக இல்லாமல் செய்யுங்கள் அதன் பின் மிச்சத்தை சொல்லுகிறேன் என்கிறார்.

சினத்தை வெல்லல் என்ற செயலினை சாத்தியமாக்கிட சொல்லி மிக கடினமான ஓர் புள்ளியில் எம்மை நிறுத்திவிட்டாரே. எப்படி கோபத்தினை வரமால் செய்வது ? நம்மீது கருணை கொண்ட பாரதி இக்கேள்விக்கு விடை சொல்லும் முகமாக நெஞ்சினில் சினம் என்னும் கொடிய தீ வராமல் செய்ய முக்கிய விடயங்கள் இரண்டினை மனத்தில் பதிவேற்ற சொல்கிறார்.

18 ஆம் பக்கம் பார்க்க...

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளோம்
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de


Sari 1
Sari 1
தரமான ஆடைகள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
எம்மிடம் தங்க நகைகளும் பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr.49, 60329 Frankfurt am Main
0152 1923 9663
Opening Hours: Mon- Sat 10.00 am- 20.00 pm
https://www.facebook.com/sari1fashionhouse


Frankfurt நகரில்...
New
ASIA LAND
Frankfurt (Main) Hauptbahnhof முன்பாக 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது
மளிகைப்பொருட்கள் மற்றும் மரக்கறி, கடலுணவுப்பொருட்கள் அனைத்தும் என்றும் சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
TAUNUSSTRASSE 49
60329 FRANKFURT
Tel: 069 23 35 35 | Fax: 069 24009760



# சில பேருக்கு தாங்கள் தமிழ் எண்டு சொல்ல வேட்கம்

## சிறுகதை

■ சுருதி

இந்தக்கிழமை முழுவதும் இரவு வேலை செய்யவேண்டும்.

இரவு நேரங்களில் வைத்திய சாலையின் அவசரபிரிவிற்கு வருபவர்களில் கொஞ்சம் வித்தியாசமானவர்களும் இருப்பார்கள். வெறி முற்றியவர்கள், போதைவஸ்துக்கள் பாவித்து கிலி முற்றியவர்கள் என பல ரகம். சாதி மத இன பால் பாகுபாடுகளின்றி எல்லாநாட்டு மனிதர்களும் இதற்குள் அடக்கம். அவர்களை ஒரு கொன்ரோலுக்குள் கொண்டுவருவது மிகவும் கடினம். நான் ஒரு பெண் தாதி என்பதையும் மறந்து, என் கை கால்களையும் பிடித்துவிடுவார்கள்.

தமிழ்மக்கள் இப்படி வரும் போது நான் ஒடுங்கிப் போவேன். அவர்களுக்கு நான் ஒரு தமிழச்சி எனக் காட்டிக் கொள்ள விரும்புவதில்லை. அவர்கள் அதை அனுகூலமாக்கிக் கொண்டுவிடுவார்கள்.

இரவு பத்துமணி இருக்கும். ஒருவர் தலைவிரி கோலத்தில் வந்தார். வயது ஐம்பதிற்கு மேல் இருக்கலாம். அம்புலன்சில் வந்திருந்தார். எலும்புக்கூடு போன்ற உருவம். உடம்பில் ஆடைகள் இல்லை. ஆடைகள் இல்லையென்றா சொன்னேன்! இடுப்பில் ஒரு சாரம் சுருள் சுருளென்று சுருண்டு ஒரு கயிறு போல் ஆகியிருந்தது. உள்ளே எந்தவிதமான மறைப்பு ஆடைகளும் இல்லை. தலைகீழாகக் கவிண்டு கிடந்தார். தலை ஹஅப்சைட் டவுணாகக் கிடந்தபோதும், அவரின் பார்வை என்மேல் தான் நிலைகுத்தியிருந்தது. ஊசிப்போன வாழைப்பழமொண்டும் நாறல்பாக்குகள் இரண்டும் கவனிப்பாரற்றுக் கிடந்தன.

நானும் எலிசபெத்தும் வரவேற்பறையில் இருந்தோம். எனக்கு அவரைப் பார்க்க வெட்கமாக இருந்தது. எலிசபெத் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துச் சிரித்தாள். அந்தப் பார்வை, வந்திருந்தவர் எனது நாட்டைச் சார்ந்தவர் என்பதாகும்.

கரகரவென அவரை இழுத்துக் கொண்டுபோய் ஊசி போட்டார்கள். இதற்கெல்லாம் மருந்து மாத்திரைகள் இல்லை. எல்லாம் அடங்க, அதிகாலையில் அனுப்பிவிடுவோம். இனி அவரைப்போல வேறு சிலரும் வரக்கூடும். சிலவேளைகளில் மிகவும் வயது குறைந்தவர்களும் வருவார்கள். பெண்பிள்ளைகளும் வந்திருக்கின்றார்கள்.

நேரம் பன்னிரண்டைத் தாண்டியிருக்கும். பத்துமணிக்கு வந்திருந்த அந்த மனிதர், தனது படுக்கையிலிருந்து எழுந்து, சுவரைத் தடவித் தடவி எங்களை நோக்கி வந்தார். வெறி முறிந்திருக்க வேண்டும். ஏன் வருகின்றார் என்பது எங்கள் இருவருக்கும் தெரியும். வீட்டிற்குப் போவதற்கு அனுமதி கேட்க வருகின்றார். இவர்களுக்கெல்லாம் வைத்தியரின் அனுமதி தேவையில்லை. நாங்களே பார்த்து அனுப்பிவிடுவோம். உண்மையில் காலை தான் அவரை அனுப்ப வேண்டும். சிலவேளைகளில் அனுமதியின்றி ஓடியும் விடுவார்கள்.

‘பிள்ளை– சீறீலங்கன் தமிழோ?– என்னைப் பார்த்துக் கேட்கின்றார்.

–நோ–

–அச்சுவேலியிலை கண்ட மாதிரிக் கிடக்கு–

–நோ–. ஐ ஆம் ஃபுறம் ஆபிரிக்கா– சொல்லிவிட்டு உள்ளே போய் மறைந்து கொண்டேன். எலிசபெத் ஆங்கிலத்தில் சரமாரியாக அவரைப் பேசித் தள்ளினாள். விறுவிறென்று வந்தவழியே நடந்து மறைந்து கொண்டார்.

இரண்டுநாட்கள் கழிந்து, தமிழ்க் கடையொன்றிற்கு சில பொருட்கள் வாங்குவதற்காகச் சென்றேன். பருப்பு, மிளகாய்த்தூள், சரக்குத் தூள்,கருவாடு என தேவையானவற்றை எடுத்துக் கொண்டேன். கணவருக்கு தொதல– என்றால் கொள்ளை ஆசை.



காசு குடுக்கும் இடத்திற்கு அருகாகவிருந்த கண்ணாடிப்பெட்டிக்குள் அழகு காட்டியது தொதல். அதில் ஒரு சிறு துண்டை வெட்டிக் தருமாறு அங்கே நின்ற பெண்மணியிடம் கேட்டேன். அவர் வெறுங்கையினால் தொதலைப் பிடித்து வெட்டத் தொடங்கினார்.

–அக்கா கிளவுஸ் போட்டு வெட்டித் தாருங்கோ– கொஞ்சம் காட்டமாகக் கேட்டேன். அவர் முகத்தைச் சுழித்தவாறே தயங்கினார்.

–சரி அக்கா– எனக்குத் தொதல் வேண்டாம். நீங்க மிச்சத்துக்கு பில் போடுங்கொ–

எங்களுக்கிடையே நடந்த இந்த உரையாடலை, யாரோ ஒருவர் உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பது போல் இருந்தது. இப்படியான சந்தர்ப்பங்கள் உங்களுக்கும் நேர்ந்திருக்கலாம். நாங்கள் படுபிஷியாக இருக்கையில், ஆராவது எங்களை மறைவாகவோ அல்லது நேரிடையாகவே பார்க்கலாம். அந்தப் பார்வை., கம்பியில்லாத் தந்தி போல எங்களை வந்தடைந்துவிடும். என்னை அப்படி மறைமுகமாக ஒளிந்து நின்று பார்த்தவர் யார்? இரண்டுநாட்களுக்கு முன்னர் வைத்தியசாலைக்கு வந்த அந்தப் பெருங்குடிமகன் தான்.

ஹஇனி இந்தாளின்ரை தொல்லை– பெரிய தொல்லையாகப் போகின்றது.

அவசர அவசரமாக பொருட்களை எடுத்துக் கொண்டு கார் நிற்குமிடம் விரைந்தேன். கார் பூற்லிட்டிற்குள் பொருட்களை அடிக்கிக் கொண்டிருக்கும் போது பின்னால் இருந்து ஒரு குரல் வந்தது.

–சிலபேருக்கு தாங்கள் தமிழ் எண்டு சொல்ல வெட்கம்– என் காதிற்குள் குனிந்து சொல்லிவிட்டு விறுவிறெண்டு நடக்கத் தொடங்கினார் அந்தப் பெருங்குடிமகன்.

அது சரி–. சிலபேர் வெட்கம் மானமில்லாமல் குடிச்சுவெறிச்சு அம்மணமா தலைகீழாக பொதுவெளியிலை கிடந்தால், எங்களுக்கு தமிழ் எண்டு சொல்ல வெட்கமாத்தான் இருக்கும்– சொல்லிக்கொண்டே பூற்லிட்டை மூடிவிட்டு திரும்பிப் பார்த்தேன். நான் சொன்னது அவருக்குக் கேட்டதோ இல்லையோ, அவர் கொஞ்சத்தூரம் போயிருந்தார். அவரின் கையிடுக்கிற்குள்ளால் ஒரு போத்தல் நீண்டு பின்னாலே தெரிந்தது.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



சேவியர்

நடுப்பக்கம்



# மறைந்து இருந்து தாக்கும் ஆனந்தம்

ஹாரி பாட்டரின் கையில் இருக்கும் மந்திரக் குச்சியைப் போல கொரோனா எனும் கிருமியைக் காலம் தனது கையில் ஏந்தி உலகத்தை நோக்கி நீட்டியது. அந்த மந்திர வீச்சின் அலை உலகின் மேல் ஒரு போர்வையைப் போல வந்திறங்கி, மக்களைச் சுருட்டிக் கட்டி அவரவர் வீடுகளில் அடைகாக்க வைத்திருக்கிறது. சன்னல்களின் வழியே வெளியுலகம் சிறைபட்டுக் கிடக்க, அறைகளுக்குள் மனிதன் அடைபட்டுக் கிடக்கிறான். உண்மையில் இது அவனுக்கான சிறைவாசமல்ல, விடுதலைக் காலம். இதுவரை அவன் இருந்த சிறையிலிருந்து விடுபட்டக் காலம்.



வாழ்க்கை நம்மை எப்படியெல்லாம் அடிமைப்படுத்தி வைத்திருந்தது ? அலாரத்தின் அலறலில் திடுக்கிட்டு விழித்தன அதிகாலைகள். அவசரத்தின் வால் பிடித்து, அரைகுறையாய் சாப்பிட்டு, சந்திரமண்டலத்தின் வட்டப்பாதைக்குள் நுழையப் போகும் ராக்கெட்டைப் போலத் தானே நமது காலைகளெல்லாம் நாலு கால்ப் பாய்ச்சலில் தாவித் திரிந்தன. பிள்ளைகளின் பள்ளிக்கூட அவசரம், அலுவலகத்தில் சரியான நேரத்தில் சென்று விரல்ப் பொட்டை டிஜிடல் பதிவேட்டில் வைக்கும் அவசரம். எங்கும் எதிலும் அவசரம் என, அவசரத்தின் அடிமைகளாய்க் கிடந்த நமக்கு இப்போது தானே கிடைத்திருக்கிறது நிதானத்தின் விடுதலை !

வாகனத்தின் இருக்கையில் அமர்ந்தோம், சாலைகளின் அனலடிக்கும் முதுகை வன்முறையாய் கீறிக் கடந்தோம். சாலையில் நம் வேகத்துக்கு தடையாய் வருகின்ற சாமான்யர்களின் மேல் கோபத்தின் ஈட்டிகளை கூச்சப்படாமல் வீசினோம். சிவப்புக்கும், பச்சைக்குமிடையே கண்சிமிட்டிய மஞ்சள் விளக்கு கூட நமது கோபத்தின் உக்கிரத்துக்குத் தப்பவில்லை. சிக்னல்களும், எதிரே வரும் அவசரப் பயணிகளும், எல்லோருமே நமது கோபத்தின் பரிமாறலை பெற்றுக் கொண்டு தான் கடந்தனர். நாம், நேற்றுவரை கோபத்தின் அடிமைகளாய்க் கிடந்தோம். அதிலிருந்து பொறுமையின் தேசத்துக்குக் கிடைத்திருக்கிறது விடுதலை !

இல்லாத கிரீடம் நம் தலையில் இருப்பதாகவும், முளைக்காத கொம்பு நம் கபாலத்தில் முளைப்பதாகவும் நாம் கற்பித்துக் கொண்ட கர்வத்தின் சங்கிலிகள் உடைந்து விட்டன. நான் எனும் மமதையில் அலுவலகங்களில் போட்ட ஆட்டமோ, சக மனிதர்களிடம் போட்ட ஆட்டமோ, நண்பர்களிடம் போட்ட ஆட்டமோ இன்றைக்கு சீட்டுக் கட்டு போல கலைந்து விட்டது. நான் என்பது ஒன்றுமேயில்லை. ஒரு சின்னக் கிருமியின் சாகச விளையாட்டில் நமது கர்வத்தின் அடிமைத்தனம் கழன்று விட்டது. இது பெருமையின் அடிமைத்தனத்திலிருந்து தாழ்மையின் தளத்துக்குக் கிடைத்திருக்கும் விடுதலை.

கொரோனா, நம்மை அடிமைப்படுத்தவில்லை.

விடுதலை செய்திருக்கிறது.

17 ஆம் பக்கம் பார்க்க...





அப்பா, சாயங்காலம் கொஞ்சம் சீக்கிரம் வருவீங்களா ? எனும் மழலைகளின் மென்மையான விண்ணப்பங்களை அலுவலகத்தின் அவசரங்கள் உடைத்திருந்தன. அப்பாவின் காலடிச் சத்தத்தை எதிர்பார்த்து சோர்ந்து போய்த் துயின்ற மழலைகளின் கனவுகளில் வெற்றிட இருக்கைகள் வலி கூட்டியிருந்தன. காலம் அப்பாக்களை பிள்ளைகளின் காலடியில் விழுந்து விளையாட வைத்திருக்கிறது.

அவர்கள் தேடித் திரிந்த மகிழ்ச்சியின் மொத்தமும், வீடுகளுக்குள்ளேயே நிரம்பியிருந்ததை அவர்கள் கண்டு கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். பட்டம் வானத்தில் பறந்தாலும், கயிறு தரையில் தான் இருக்க வேண்டும். வாழ்க்கை உலகெங்கும் பறந்தாலும், மகிழ்வு இல்லங்களில் தான் உறைய வேண்டும். இந்த உண்மையின் விளக்கத்தை கொரோனாவின் வருகை, வீடுகளின் வரவேற்பறைகளில் எழுதிச் சென்றிருக்கிறது.

தான் மட்டுமே வியர்வை சிந்த வேலை செய்கிறேன், வீட்டிலிருக்கும் மனைவியரோ சீரியல் பார்த்து சிலாகித்திருக்கின்றனர் எனும் ஆணாதிக்க சிந்தனையின் மேல்; ஆணியடித்திருக்கிறதே காலம் ! வீடுகளில் மனைவியரின் பணிகளைப் பார்த்து பிரமிக்கவும். அந்த பணிகளை சற்றே தனது தோள்களிலும் சுமக்கவும் ஆண்களுக்கு சமத்துவம் வழங்கியிருக்கிறதே கோவிட். தப்புத் தப்பாய்க் கற்றுக் கொண்ட வாழ்வின் புரிதல்களைச், சரியாய் விளக்கிச் சென்றிருக்கிறது இந்த கண்ணுக்குத் தெரியாத ஆசான்.

நிதானமாய் அமர்ந்து, எல்லோருமாய்ச் சேர்ந்து உண்ணும் காலை உணவுகளில் சிரிப்பின் ஒலிகள் சிதறி விழுகின்றன. மதிய நேர உரையாடல் உணவுகளில், அன்பின் ஈரம் அதிகமாய் இருக்கிறது. மென் மாலைப் பொழுதுகளின் விளையாட்டுகள் குடும்பத்தின் அன்னியோன்யத்தின் இழைகளை காற்றுப் புகா அளவுக்கு இறுக்கிக் கட்டியிருக்கிறது. உதிரிப் பூக்களாய் கிடந்த குடும்பத்தின் உறவுகளை புலப்படா புலன்களைக் கொண்டு பிணைக்க வைத்திருக்கிறது இந்த கொலைகாரக் கிருமி.

எனக்கு நேரமில்லை ! எதற்கும் நேரமில்லை !! எனும் புலம்பல்கள் ஓய்ந்து விட்டன. நேரம் எப்போதும் நம்மிடம் இருக்கிறது, அந்த நேரத்தை நாம் பயன்படுத்தலாமா வேண்டாமா எனும் முடிவு மட்டுமே நாம் எடுக்க வேண்டியிருக்கிறது. முதன்மைகளே வாழ்வின் நேரத்தை நிர்ணயம் செய்கின்றன. என்றெல்லாம் தத்துவார்த்தச் சிந்தனைகளை சாமான்யனுக்கும் தந்து செல்கிறது கோவிட் கிருமி.

அப்பாக்கள் இத்தனை மென்மையானவர்களா என குழந்தைகளின் உள்ளங்கள் குதூகலிக்கின்றன. என் பிள்ளைகளின் தேசத்தில் இத்தனை பரவச மலர்கள் பூத்துக் கிடக்கின்றனவா என அலுவலக அன்னையரின் விழிகள் பிரமித்துச் சிரிக்கின்றன. எனது இல்லத்தின் வாசல்களில் இத்தனை ஆனந்தம் கலர் கலராய் கண் சிமிட்டிக் கிடக்கிறதா என அப்பாக்களின் இதயங்கள் புரியாமல் பார்க்கின்றன. ஒரு கிருமி, தன் மைக்ரோஸ்கோப்பிக் நெம்புகோல் கொண்டு இல்லங்களை புரட்டித் தள்ளியிருக்கிறது. புரண்டு படுத்தவர்கள் உறவுகளின் இனிமையில் புளகாங்கிதம் அடைகிறார்கள்.

வீடு என்பது வெறுமனே இரவில் வந்து தூங்கும் இடமல்ல. வீடு என்பது வெறுமனே சுவர்களால் அடைக்கப்பட்ட ஒரு பாதுகாப்புத் தளமல்ல. வீடு என்பது ஒரு அடையாளமல்ல. வீடு என்பது ஒரு தற்காலிக தங்குமிடமல்ல. வீடு என்பது தனிமனிதனுக்கு இறைவன் கொடுத்த சொர்க்கம். வீடு என்பது செதுக்கச் செதுக்க அழகாகிக் கொண்டே செல்லும் ஒரு சிற்பம். வீடு என்பது மகிழ்வின் ராட்சசர்கள் விழிமூடிக் கிடக்கும் இடம் என்பதைப் புரிய வைத்திருக்கிறது காலம்.

நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்கும் கடிகாரத்தைப் போன்ற வாழ்க்கையிலிருந்து, மெல்ல மெல்ல நின்று நிதானிக்கும் ஒரு மனநிலைக்கு நம்மை இழுத்துக் கொண்டு வந்திருக்கிறது இயற்கை. சின்னச் சின்ன சண்டைகளில் இருக்கும் சுவாரஸ்யங்களை அறியவும், சின்னச் சின்ன வம்புகளில் இருக்கும் வசீகரத்தைப் புரியவும்,

சின்னச் சின்னக் கோபங்களில் இருக்கும் அன்பினை அறிந்து கொள்ளவும் நமக்கு இறைவன் அளித்த வாய்ப்பாய் விழித்திருக்கிறது இந்தக் காலம்.

இங்கே நாம் உலகின் பார்வைக்கு அடிமைகளாய் இருக்கிறோம். ஆனால் உண்மையில் நமது சுயத்தின் கதவுகளைத் திறந்து வைத்து ஆனந்தமாய் உள்ளொளிப் பயணத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம். அது நமக்குள் புதைந்து கிடக்கும் கடல்களை மெல்ல மெல்ல வெளிக்கொணர்கிறது. அது பெருகிப் பிரவாகமெடுத்து கடந்த கால அழுக்குகளை கழுவிக் கொண்டிருக்கிறது.

இங்கே நாம் உலகின் பார்வைக்கு ஊரடங்கில் உறைந்திருக்கிறோம். உண்மையில் நாம் கட்டுப்பாட்டில் இருப்பதனால், கட்டவிழ்க்கப் பட்டிருக்கிறோம். வலுக்கட்டாயமாய் அடக்கப்பட்டதால், விருப்பப்பட்டு உடைத்திருக்கிறோம்.





கொரோனா நம்மைக் கஷ்டப்படுத்தவில்லை கட்டவிழ்த்திருக்கிறது.

வல்லரசுகளென்றும், நல்லரசுகளென்றும், சர்வாதிகாரியென்றும், பொதுவுடமைவாதியென்றும் ஏதேதோ பெயர்வைத்து அழைத்துக் கொண்ட தேசங்களெல்லாம் இன்று ஒரு அணுவின் முன்னால் அடிபணிந்திருக்கின்றன. நெஞ்சு நிமிர்த்தி வீராவேசம் பேசிய தலைவர்களெல்லாம் பாதுகாப்புக் கவசத்துக்குள் பாதுகாக்கப்படுகின்றனர். நாடுகளை அழித்தொழிப்பேன் என்று கர்ஜித்தவர்களெல்லாம் இன்று பூனைப் பற்களுடன் பதுங்கிக் கிடக்கின்றனர்.

ஒட்டு மொத்த உலகையும் தனது விரல் சொடுக்கினால் வெலவெலக்க வைத்திருக்கிறது இந்த வைரஸ். புதைந்து கிடந்த ஆனந்தத்தைத் தோண்டியெடுத்தாலும் இது விட்டுச் சென்ற வலிமிகும் சுவடுகளை உதாசீனப்படுத்த முடியவில்லை. நுரையீரலின் கதவை வலுக்கட்டாயமாய்ச் சாத்தி, கவிழ்த்துச் சென்ற உயிர்களை நினைத்து கலங்காமலிருக்க முடியவில்லை. மக்களின் வயிறுகளில் பசியின் சுத்தியலால் அடித்து அவர்களின் பட்டினிப் பிரதேசங்களில் கண்ணீர் ஊற்றெடுக்க வைத்த கயமையை குறை கூறாமல் இருக்க முடியவில்லை.

ஆயிரம் கிலோமீட்டர் தூரம் உயிர் சுமந்தும், ஆங்காங்கே உயிர் உதிர்த்தும் நடந்த ஆயிரமாயிரம் தொழிலாளர்களின் கண்ணீர் துணிகளை ஏறிட்டுப் பார்க்கவும் வலிமை வரவில்லை. இதற்குப் பின்னும் மனமிரங்காமல் இருக்க முடியுமா எனும் அதிர்ச்சிக் கேள்வியையும் கோவிட் நமக்குத் தந்திருக்கிறது என்பதை மறுக்க முடியவில்லை.

வாழப் பழகிக் கொள் ! எனும் வார்த்தைகள் மட்டும் கொரோனாவின் தாக்கத்தை விட வீரியமாய், எதிர்பார்ப்பின் உச்சந்தலையிலும், நம்பிக்கையின் முதுகெலும்பிலும் பாறாங்கல்லைப் புரட்டி வைக்கிறது. எனினும் அடைமழையின் சிறுதுளிகள் இலைகளில் தங்கி விரல்களை நனைப்பது போல ஆங்காங்கே முளைத்தெழும் மனிதத்தின் முளைகள் மனுக்குலத்தின் மீதான நம்பிக்கையை மீண்டெடுக்கின்றன.

மனிதனைத் தனிமைப்படுத்திய கொரோனா, மனிதனுக்குள் இருக்கும் தீய எண்ணங்களையும் தனிமைப்படுத்தியிருந்தால் எத்தனை நலமாய் இருக்கும் எனும் கடைசி சிந்தனை ஏக்கத்தின் பெருமூச்சாய் வந்து இந்தக் கட்டுரையை நிறைவு செய்கிறது.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# யேர்மனியில் ஓரினச் சேர்க்கை சிகிச்சை’ தடைசெய்யப்படுகிறது

**ஆண்டுக்கு யேர்மனியில் சுமார் 1,000 பேர் மாற்று சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.**



சிவப்பிரியன்

யேர்மனியின் நாடாளுமன்றம் நாடு முழுவதும் இளைஞர்களுக்கு ‘ஓரின சேர்க்கை சிகிச்சை’ 'gay conversion therapy' என்று அழைக்கப்படும் சிகிச்சையை தடைசெய்யும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

ஒரு நபரின் பாலியல் நோக்குநிலையை 18 வயதிற்கு உட்பட்டவர்களாக மாற்ற முடியும் என்று கூறும் சேவையை வழங்கும் குழுக்களை நிறுத்துவதே இந்த சட்டத்தின் நோக்கம்.

புதிய சட்டத்தை மீறுபவர்கள் ஒரு வருடம் வரை சிறைத்தண்டனை அல்லது 30,000 யூரோ அபராதம் விதிக்கலாம்.

சர்ச்சைக்குரிய நடைமுறை மனச்சோர்வுக்கு வழிவகுக்கும் மற்றும் தற்கொலை அபாயத்தை அதிகரிக்கும் என்று ஆராய்ச்சிகள் கூறுகிறது.

வியாழக்கிழமை [07.05.2020] நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் கீழ், சிறார்களுக்கு அவர்களின் பாலியல் நோக்குநிலை அல்லது பாலின அடையாளத்தை மாற்றுவதை அல்லது அடக்குவதை நோக்கமாகக் கொண்ட மருத்துவ தலையீடுகளில் பங்கேற்க அனுமதிக்கப்படாது.

பெற்றோர்கள் மற்றும் சட்டப்பூர்வ பாதுகாவலர்கள் தங்கள் குழந்தைகளை ஏமாற்றுதல், வற்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல்கள் மூலம் பங்கேற்க வைத்ததற்காக அவர்கள் தண்டிக்கப்படலாம்.

மாற்று சிகிச்சை முறைகளில் ஹிப்னாஸிஸ் மற்றும் மின்சார அதிர்ச்சிகள் அடங்கும். ஆனால் ‘தெரபி’ என்ற சொல் தவறாக வழிநடத்துகிறது, ஏனெனில் அதற்கு அறிவியல் அடிப்படை கிடையாது.

நீதிமன்ற சவால்களிலிருந்து அதைப் பாதுகாக்க ஒரு வலுவான சட்டம் தேவை என்று ஜேர்மன் சுகாதார மந்திரி ஜென்ஸ் ஸ்பான் (German Health Minister Jens Spahn கூறினார்.], சிகிச்சையில் கலந்து கொண்ட பெரும்பாலானவர்கள் இளைஞர்களாலும், மற்றவர்களாலும் அவ்வாறு செய்ய நிர்பந்திக்கப்பட்டனர்.

‘ஓரினச்சேர்க்கை என்பது ஒரு நோய் அல்ல, அதனால்தான் அதற்கு சிகிச்சையளிக்க வேண்டிய அவசியமில்லை’ என்று ஓரினச்சேர்க்கையாளரான ஸ்பான் கூறினார்.

இந்த நாட்டில் நாங்கள் அதை விரும்பவில்லை’ என்று ‘அரசு, சமூகம், பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தும் போது அவர்கள் தம் நலன்கள் பலப்படுவதை அவர்கள் உணர வேண்டும்: என்று ஓரின சேர்க்கையாளராக இருக்கும் திரு ஸ்பான் கூறினார்.

பேர்லினில் உள்ள மனித உரிமை அமைப்பான மேக்னஸ் ஹிர்ஷ்பீல்ட் அறக்கட்டளையின் தரவுகளின்படி ஒவ்வொரு ஆண்டும் ஜெர்மனியில் சுமார் 1,000 பேர் மாற்று சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

இந்த நடைமுறை சுவிட்சர்லாந்து மற்றும் ஆஸ்திரேலியா, கனடா மற்றும் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டுள்ளது.ஓரின சேர்க்கையாளராக இருக்கும் சுகாதார அமைச்சர் ஜென்ஸ் ஸ்பான், கடந்த ஆண்டு இந்த நடைமுறையை தடை செய்வதற்கான திட்டங்களை அறிவித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...




ஒன்று , மற்றவரை குறைவென்று நினைத்து , எல்லோரும் சமம் என்று கருதாது, மற்றவர்களோடு சம்பந்தப்பட்ட விடயங்களை மிக சாதாரணம் என்று கருதுவதால் சினம் வரும். எனவே எம்முள் உள்ள ஆணவத்தினை [ego] இல்லாமல் செய்ய வேண்டும்.

இரண்டாவது , எம்மை சூழ்ந்திருக்கின்ற எல்லாமே கடவுள் தான் என்ற உண்மையான ஞானத்தை மறந்திருப்பதால் சினம் வரும். ஆகவே எல்லாருக்குள்ளும் பரம் பொருள் நிறைந்துள்ளார் என்பதனை மறக்க கூடாது.

**அத்வைத நிலைகண்டால்**
**மரணமுண்டோ?**

பிறரை இழிவு படுத்தாது , நம்மை சுற்றியுள்ள எல்லாமே கடவுள் என்று கடைபிடித்தால், நெஞ்சில் உள்ள சினம் என்கிற கொடூரமான தன்னையும் பிறரையும் சுடடெரிக்கவல்ல தீ இல்லமால் போகும். அசுரத் தனமான அந்த தீ இல்லமால் போனால் தான் ஞானத்தீயை வளர்த்து நம் உடலில் இறையின் பெரும் ஜோதியை உள்வாங்கிக்கொள்ளலாம்.இந்த ஜோதி உடலில் நிறையும் போது எம்முள் உள்ள சக்திக்கு மரணம் ஏற்படாது. இந்த உடலுக்கு மட்டும் தான் அழிவு ஏற்படுமே தவிர உயிர் சக்திக்கு இல்லை. அந்த வேளை உள்ளும் புறமும் உள்ளதெல்லாம் ஒன்றாகி அத்வைத நிலையில் அகத்தினில் பரம் பொருளை காணலாம். இந்த நிலையினை அடைவதற்கு மாய இருளை நீக்க கூடிய குருவின் பாதங்களை தியானிப்பது முதல் படிநிலை. என்பதையே பாரதியின் மரணத்தை வெல்லும் வழி குறிப்பிடுகிறது என்று கருதலாம்.

இத்தகைய பெரும் உண்மையை மிக எளிய நடையில் பாமரருக்கும் புரியும் வகையில் புத்திக்கு எட்டச் செய்த தத்துவ வேந்தன் பாரதியின் திருவடிகளில் சரணடைவதே என் வழியன்றிப் பிறிதில்லை.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# மனிதனைப் போல் விலங்கும் கனவு காணுமா?

நீங்கள் கடைசியாகக் கண்ட கனவு என்ன? இப்படி ஒரு கேள்வியைக் கேட்டால் அதற்கு ஒரு பதிலை உங்களால் ஒரு கொஞ்ச நேரத்தில் சொல்ல முடிகின்றது தானே? பிறந்த சிறு குழந்தையில் இருந்து முதியோர்கள் வரை, கனவு காணாதவர்கள் இந்த உலகிலே இல்லை. சரி மனிதர்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். பேசத் தெரிந்ததால் மனிதர்களிடம் நீ கண்ட கனவு என்னவென்று கேட்டால் அதற்குப் பதில் கிடைக்கின்றது, ஆனால் பேசத் தெரியாத விலங்குகளும் கனவு காண்கின்றனவா? என்ன நண்பர்களே, இந்தக் கேள்வியைப் பற்றி எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்திருக்கின்றீர்களா?


மனிதனைப் போல் விலங்கும் கனவு காணுமா? இந்தக் கேள்விக்குப் பதிலை அறிவதற்கு முன்பு, முதலில் விலங்கு என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். விலங்கு இராச்சியத்தில் முதுகெலும்பு உள்ள விலங்குகள் மற்றும் முதுகெலும்பில்லாத விலங்குகள் என்று இரு பிரிவுகள் இருக்கின்றன. முதுகெலும்புள்ள விலங்குகளைத் தமிழில் முதுகெலும்பி என்றும் ஆங்கிலத்தில் Vertebrates என்றும் அழைப்பார்கள். முதுகெலும்பில்லாத விலங்குகளை முதுகெலும்பிலி அல்லது Invertebrates என்று கூறுவார்கள்.

முதுகெலும்பில்லாத விலங்குகளில் உதாரணத்திற்குப் பூச்சிகள், நண்டு போன்ற ஓடுடைய இனங்கள் அல்லது நத்தை போன்ற மெல்லுடலிகள் அடங்கும். இதுவே முதுகெலும்புடைய விலங்குகளை எடுத்துக் கொண்டால் அவை ஐந்து வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அந்த வரிசையில் முதலாவது வகை மீன்கள் அதாவது fish ஆகும். அடுத்த வகை நிலநீர் வாழிகள், அதாவது ஆங்கிலத்தில் Amphibians என்றழைக்கப்படும் தவளை போன்றவை. மூன்றாவது வகை Reptiles அதாவது ஊர்வன ஆகும். இதில் ஆமை, பாம்பு, முதலை போன்ற பல்வேறு விலங்குகள் அடங்கும். இந்த வரிசையில் அடுத்ததாகப் பறவைகள் அதாவது birds வருகின்றன. இவற்றைத் தொடர்ந்து பாலூட்டிகள் அதாவது mammals வருகின்றன. இதில் குறிப்பிட வேண்டிய விஷயம் என்னவென்றால், மனிதர்களாகிய நாம் கூட பாலூட்டிகள் எனும் பகுப்பில் தான் சேர்க்கப்படுகின்றோம்.



Dr.நிரோஷன் தில்லைநாதன்

அது சரி, இது என்னடா ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கும் விலங்குகளைப் பற்றிய இந்த நீளமான விளக்கத்திற்கும் என்ன தான் தொடர்பிருக்கின்றது என்று யோசிக்கின்றீர்களா? நிச்சயமாக இருக்கிறது! ஆனால் இதைப் பற்றி தொடர்ந்து பார்ப்பதற்கு முன்பு, முதலில் கனவு காண்பது என்றால் என்ன என்பதைப் பார்ப்போம்.



நாம் தூங்கும் பொழுது இரு வகையான தூக்க நிலைகள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? சுமார் 75–80ூ நேரத்தில் நாம் nonREM நிலையில் அதாவது non rapid eye movement தூக்கத்தில் இருப்போம். இந்த நிலையில் தான் நாம் உண்மையிலே தூங்குகின்றோம், அதாவது களைப்பாறுகின்றோம் என்று எடுத்துக்கொள்ளலாம். இந்த nonREM தூக்கத்திற்குப் பக்கத்தில் REM தூக்கம், அதாவது Rapid Eye Movement தூக்கம் இருக்கிறது. நாம் தூங்கும் மொத்த நேரத்தில் 20-25% நேரத்தில் இந்த REM நிலையில் தான் இருப்போம். Rapid Eye Movements என்றால் நாம் தூங்கும் பொழுது நம்மை அறியாமலே நமது கண்கள் விரைவாக அங்கும் இங்கும் என்று அசைந்து கொண்டே இருக்கும். விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின்படி இந்த REM நிலையில் இருக்கும் பொழுது தான் நாம் கனவுகளைக் காண்கிறோம். எனவே ஒரு மனிதன் தூங்கும் போது அவரது கண்கள் அசைந்துகொண்டே இருப்பதை நாம் அவதானித்தால், அவர் REM நிலையில் இருக்கிறார் என்பதை மட்டும் இல்லாமல், அவர் கூடுதலாக கனவு காண்கிறார் என்பதையும் எடுத்துக்கொள்ளலாம். சரி சரி சரி, கனவுகள் பற்றியும், விலங்குகள் பற்றியும் போதும். இனி விஷயத்துக்கு வருவோம். விலங்கு கனவு காணுமா? இதற்குரிய பதிலை ஆம் அல்லது இல்லை என்று இலகுவாகச் சொல்லிவிட முடியாது. இருந்தும் இதற்குரிய பதிலைத் தெரிந்துகொள்வதற்காகவே ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு விலங்குகள் தூங்கும் போது, அந்த விலங்குகளும் கூட REM தூக்கத்தை அடைகின்றனவா என்பதை சோதித்துப் பார்த்தனர். இதில் உள்ள ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், பல விதமான விலங்குகள் கூட REM நிலையில் தூங்குகின்றன. ஒரு சில விலங்குகளின் REM நிலை குறுகிய நேரமாகவும், வேறு விலங்குகளில் REM நிலை நீளமாக இருப்பதையும் அவதானித்தார்கள். இது அந்த விலங்கின் மூளையின் அளவுடன் தொடர்புடையது என்பதையும் முன்வைத்துள்ளனர். குறிப்பாக மூளையின் அளவு அதிகரிக்கும் போது, REM நிலையில் தூங்குவதன் நேரமும் அதிகரிக்கிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

குரங்கு, நாய், பூனை, எலி போன்ற பாலூட்டி விலங்குகள் கனவு காண்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்பதைப் பலவிதமான ஆராய்ச்சிகளூடாக நிரூபித்துள்ளனர். உதாரணத்திற்குத் தூங்கிக்கொண்டிருக்கும் பூனைகளோ, நாய்களோ திடீரென்று கால்களை ஆட்டுவதையும்,

சத்தங்களைப் போடுவதையும் அவதானித்துள்ளனர். ஏன் சில வகையான பறவைகள் கூடக் கனவு காண்கின்றன என்பதையும் கண்டுபிடித்துள்ளனர். ஜெர்மனியில் உள்ள சில விஞ்ஞானிகள் இது எல்லாமே போதாது என்று சில வகை ஊர்வன அதாவது reptiles கூட REM நிலையில் தூங்குகின்றன என்பதை அறிந்துள்ளனர், எனவே இவை கூட கனவு காண்பதற்கான வாய்ப்புகள் உள்ளது என்பதைத் தெரிவித்துள்ளனர்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jaffna Bazar
Jaffna Bazar
2020 ஆண்டுக்கான
புத்தம் புது டிசைன்களை
வாங்கி மகிழுகள்!
உங்கள் இல்லத்திற்கு தேவையான
அனைத்து மளிகைப்பொருட்களும்
பசுமையான மரக்கறி மற்றும்
கடல் உணவு வகைகளும்
KADHIR
Laila
Basmati Rice
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# MERGE IN DIVINE LIGHT THROUGH YOGIC EXERCISES


Science has given us an excellent picture of the evolution of life from amoeba to Homo Sapiens. The human organism consists of different and distinct parts indissolubly connected. Research has provided us a wide-ranging knowledge of the human structure, enabling us to diagnose physical illness by finding its causes, remedies and ways for preventing them. There are deeper secrets in our body which lie beyond the senses and the mind. There is an extraordinary light which is radiated from the body filled with cosmic energy. Stula-the gross, sukshma- the subtle, and karana- the casual, are the names given to the different bodies the sprit or Atman takes.

The first is the visible dense body containing particles of matter taken from the Earth of physical plane, the visible part of the body is divided into two sheaths, known as the Annamayya kosha- the food sheath, Pranamayana kosa or vital sheath. During sleep the spirit leaves the food sheath passing into the Subtle body and resting in itself without any contact with the physical body though both bodies are connected.

It is through the Chakaras that cosmic energy penetrates the body and the heart becomes a source of eternal love. But such energy is only revealed to those who have developed their hidden powers. According to Yoga, cosmic energy which is the creator of the micro and macrocosm runs through subtle astral tubes called Naddi. Yogic science states that there are approximately 72000 nadis which transport and distribute cosmic energy throughout the body. A calm, peaceful meditative attitude enables one to preserve inner and outer balance. To reach this goal, the mind must be purified by the practice of silence, meditation, rhythmic breathing, pranayama and certain asanas.



Bavvatharani R
Nallur



Yoga means the union of body, mind and soul. By the grace of Lord Shiva, the Saint Pathanjali wrote the Yoga Sutram. In India yoga is well established. Those who followed and practiced yoga have obtained immense benefits. Many Rishies, Saints, and great spiritual leaders lived more than 100 years on the sand, in caves and even under the sand. They could hold their breath in water and survive for any number of hours. Many performed miracles by controlling the five elements air, earth, water, fire and space. Such as physical fitness, good health and peace. Above these benefits many unknown and known saints such as Swami Sivanantha have attained the target of yoga which is union of soul with the supreme soul (Para Brahma). It encourages you to relax, slow your breath, and focus on the present, shifting the balance from the sympathetic nervous system to the parasympathetic nervous system. Some advanced yogis can control their bodies in extraordinary ways, many of which are mediated by the nervous system. Scientists have monitored yogis who could induce unusual heart rhythms, generate specific brain-wave patterns, and, using a meditation technique, raise the temperature of their hands by 15 degrees Fahrenheit. If they can use yoga to do that, perhaps you could learn to improve blood flow to induce relaxation when you're having trouble falling asleep. There are 840,000 poses according to the Yoga Shastras. In them there are 84 important asanas. asana means posture.




Asanas can be divided broadly into two main groups, meditative postures and cultural postures; There are 4 meditative poses. The lotus pose (padmasan), siddhasan, swastikasan and sukasan (easy comfortable pose). There is another asana called as vajrasan which can be practised by person who cannot practice any other position. These meditative poses are significant when students sit for breathing exercises and meditation. Besides a straight spine helps the students to concentrate because in the street position there is a steady flow of nerve current or nerve energy through the body the study of the pores the more you will be able to concentrate and make the mind one.

Eight Accessories of Raja Yoga where meditative poses are used

1.Yama - ethics
2.Niyama - religious observances
3.Asana - Postures
4.Pranayama - breathing exercises
5.Pratyahara - withdrawal of senses from objects
6.Dharana - concentration
7.Dyyana - meditation
8.Samadhi - super consciousness

Cultural postures denote the daily physical exercise postures that train the body and mind in Yoga Practice.

Continu/ page28









விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





ராம்.பரமானந்தன்

# வயலின் விளையாடப்படுகிறது!

புலம்பெயர் நாடுகளில் தமிழ்ப் பாடசாலைகள், நூல்கள், இணையத்தளங்கள் இருந்தாலும், ஒலிசார்ந்த முறையிலேயே எமது சொல்வளத்தை இரண்டாம் தலைமுறையினர் நாம் வளர்த்துக் கொண்டு வருகிறோம். எம்மில் தமிழ் எழுதத்தெரியாதவர்களுக்கு சொற்றொடர்கள் கேள்வி ஞாபகத்திலேதான் உலாவுகின்றன. இவை அதிகமாக வாழிடமொழியின் எழுத்துக்களால் மனத்தாள்களில் எழுதப்பட்டு அவற்றின் அம்மொழியின் எழுத்துக் கட்டுப்பாட்டுக்குள் சிக்கிக்கிடக்கும். ஆகவே எங்களது உச்சரிப்பாக இருக்கட்டும், இலக்கணமாக இருக்கட்டும், எம்மை சுத்தி உள்ளோரின் சொற்பாவனையில் [சொற்துல்லியத்திலேயே] தங்கியுள்ளன. இதைப் பற்றிப் பேசுகையில் சினிமாவில் ஒரு விதமாகவும், ஈழத்தமிழிழ் வீடுகளில் இன்னொரு விதமாகவும் உச்சரிக்கப்படும் சொற்கள் பல என் ஞாபகத்தில வருகிறது. புலம்பெயர் தமிழர்களின் இளம்சமுதாயம் தமது தமிழ்வளத்தின் பாரிய பங்கை இந்தியத் தமிழ்சினிமாவில் இருந்தே பெற்றுக்கொள்கிறது.

அச்சொற்கள் ஈழத்தமிழிற்குள் தழுவும் போது, பொருத்தமிலாது சிலருக்கு படுவதை, சிலர் அறிவதும் இல்லை. அறியாதவர்களை கேலி செய்ய, தமிழ் தெரியாத இவர்கள் மனதில் –ரீ குடியுங்கோ– என்று சொல்வதா, இல்லை –ரீ சாப்பிடுங்க– என்று சொல்வதா என்பதில் தினமும் போராட்டம். இது மொழியின் சரியான பாவனைக்கான போராட்டம் மட்டுமல்ல, கருத்தியலினதும், அடையாளத்தினதும் பொருளியத்திற்கான போராட்டம்.

யேர்மன் மற்றும் ஆங்கில மொழிகளில் வயலினை இசைப்பதை ‘‘playing the violin" அல்லது “Die Geige spielen“ என்பார்கள். அதாவது இம்மொழிகளில் வயலின் விளையாடப்படுகிறது. தமிழில் ஏனோ வயலின் வாசிக்கப்படுகிறது. தமிழில் இசைக்கருவிகள் வாசிக்கப்படுகின்றன, ஆங்கிலத்தில் விளையாடப்படுகின்றன. தமிழில் உள்ள கருத்தொரிமிப்பு இசைக்கருவிகள் கல்வியின் பொருட்டு பாவனை செய்யப்படுவதால் மதிப்பிற்குரியன என்பதால் நூல்களைப்போல வாசிக்கபடுகின்றன எனலாம். அந்த மதிப்பு கல்வி சம்மந்தப்பட்ட பொருட்களுக்கு, உயர்ந்த மானிடர்களுக்கு வழங்கும் அதே மதிப்பாகக் காணலாம். ஒரு பொருளை குறிக்கும் முறை அந்தக் கலாச்சாரத்தின் அடிப்படையில் உள்ளது, மொழியும் கலாச்சாரமும் எத்தகைய நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன என்பதற்கு இது ஆதாரம்.



புலம்பெயர்மேடைகளில் இளம் கலைஞர்கள் தம்மை வயலின் விளையாடுபவராக அறிமுகப்படுத்தியிருந்தால், அந்த மொழியை ஊட்டியிருந்தால் , அந்தக் கலாச்சாரமே இளையவர்களிடம் போய்ச் சேர்ந்திருக்காதோ என எண்ணவைக்கிறது. பொருட்களை உயிர்ப்பித்து மதிப்பது, கிழைத்தேய சமுதாயங்களின் சிறப்பு. அது இளையவர்கள் அறிவுக்கு எட்டாது போய்யிருக்கும்.

அதே போன்று, ஜேர்மன், டச் பிரென்சு போன்ற மொழிகளில் அன்னை தந்தை, அண்ணண், அக்கா போன்ற மதிப்புக்குரிய உறவுமுறைகளையும் நீ நான் என்று பேச, தமிழில் நீங்கள் என்று சொல்வது கவர்ச்சியான ஒரு விடையமாக இருக்கிறது. அதைவிட குழப்பங்கள் பலவும் அதிலே அடங்கும். உறவினர்களை அழைக்கும் போதோ, அவர்களைப் பற்றி பேசும்போதோ மிக நுணுக்கமான சில அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டிய கட்டாயம் தமிழ்மொழிக்கலாச்சாரத்தில உண்டு. தாயாரின் மாமியார் தொலைபேசியில் கதைத்தால் – உங்கட மாமி கதைக்கிறா!– என்பதற்கும், –பாட்டி கதைக்கிறா!– என்பதற்கும் வேறுபாடு தெரியாது மழலை பேசியகாலத்தில் பேசி அடிகள் வேண்டிய ஞாபகம் எனக்கும்; உண்டு. ஒரு உறவினரை மாண்புடன் அழைத்துக் கொள்வது மொழிசம்மந்தப்பட்டது மட்டுமல்ல, கலாச்சாரக்கூறுகளால் அது நிலைநாட்டப்பட்டிருககிறது. எவரை என் நேரத்தில் நீ என்பதும், சாப்பிடுவதா குடிப்பதா, அடிப்பதா பிடிப்பதா என்பதற்கான இலக்கணங்களை யார் பொறுமையாக சொல்லிக்கொடுப்பார்? நிச்சயமாக நீங்கள் பார்க்கும் தொடர் நாடகங்கள் அல்ல.






# திருமந்திரம் கூறும் கரு உருவாதல்

50

சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி

விஞ்ஞானம் இப்போது கண்டுபிடிக்கும் பல விடையங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே முனிவர்களும், யோகிகளும், நாயன்மார்களும், அருளாளர்களும் தங்கள் பாடல்கள் மூலம் எமக்குக் கூறியுள்ளார்கள். கரு உருவாதல் பற்றி, ஒவ்வொரு மாதமும் அதன் வளரச்சி பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் 4 ஆவது பதிகம் போற்றித் திருஅகவலில் 13 ஆவது வரியில்

> **மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து**
> **ஈனமில் கிருமிச் செருவினிற்**
> **பிழைத்தும் ஒருமதித் தான்றியின்**
> **இருமையிற் பிழைத்தும்...**

எனத் தொடங்கி 27 வரி வரை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

திருமூலநாயனாரும் திருமந்திரத்தில் பல பாடல்கள் மூலம் கரு உருவாதல் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். இறைவன் அருளால் தான் கரு உருவாகுவதாகக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 451

> **ஆக்குகின் றான்முன் பிரிந்த இருபத்தஞ்சு**
> **ஆக்குகின் றான்அவன் ஆதிஎம் ஆருயிர்**
> **ஆக்குகின் றான்கர்ப்பக் கோளகை**
> **உள்ளிருந்(து)**
> **ஆக்குகின் றான்அவன் ஆவ(து) அறிந்தே**

அனைத்தையும் உருவாக்குகிறான் ஆதியாகிய பரம்பொருள். முன்பு உடலை விட்டு நீங்கிய பொறி ஐந்து, புலன் ஐந்து, பெரும் பூதங்கள் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆன்மா என இருபத்து ஐந்து தத்துவங்களையும் தாயாரின் கருப்பைக்குள் இருக்கும் உயிரோடு பொருந்தச் செய்து உதவுகின்றான். அந்த உயிர்களுக்குத் தேவையானதை உணர்ந்து ஆக்குகின்றான். அவை தோன்ற அருள் செய்கின்றான்.



இறை அருள்தான் கருவில் உள்ள உயிரைப் பத்து மாதம் காத்துப் பின் வெளிவர உதவுவதாகக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 452

> **அறிகின்ற மூலத்தின் மேல்அங்கி அப்புச்**
> **செறிகின்ற ஞானத்துச் செந்தாள் கொளுவிப்**
> **பொறைநின்ற இன்னுயிர் போந்துறை நாடப்**
> **பறிகின்ற பத்தெனும் பாரம்செய் தானே**

தவயோகத்தால் உணர்ந்தறியக் கூடிய, நெருப்பும் நீரும் கலந்த உயர்ந்த மூலாதாரத்தில் இறைவன் திருவடிகளை நெஞ்சிலும், நினைவிலும் பதிந்திருக்கச் செய்து, கருவில் உள்ள இன்னுயிரைப் பொறுமையுடன் காத்துப் பின் பத்து மாதங்கள் கழிந்து அது வெளிப்பட வைத்துள்ளது பரமன் திருவருளாகும்.

உயிர் இவ்வுலகில் வாழவேண்டிய காலம், வாழ்க்கை முறை என்பனவற்றை இறைவன் கரு உருவாகும்போதே தீர்மானிப்பதாகக் கூறும் திருமந்திரப் பாடல் 453

> **இன்புறு காலத்து இருவர்முன்(பு) ஊறிய**
> **துன்புறு பாசத் துயர்மனை வானுளன்**
> **பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்**
> **அன்புறு காலத்(து)**
> **அமைத்தொழிந் தானே**

இன்பம் அடைய விரும்பிக் கணவன் மனைவியாகிய இருவரும் பிறவிதோறும் தொடரும், துன்பம் தரும் வினையாகிய பாசத்தில் சிக்கிட, வினைக்கிடமான உடம்பில், உயிர்த்த உயிர் இந்த உலகில் வாழவேண்டிய கால அளவையும், ஏற்க வேண்டிய வாழ்க்கை முறையையும், இறைவன் அன்புடைய அவ்விருவரும் இன்புறக் கூடிய காலத்திலேயே அமைய அருள் செய்து விட்டான்.

குறித்த காலத்தில் கருவுக்கு மூச்சுக் காற்று வரும் எனக்கூறும் பாடல் 456

> **பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவும்**
> **தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்**
> **மேவிய சீவனில் மெல்லநீள் வாயுவும்**
> **கூவி அவிழுங் குறிக்கொண்ட போதே**

பூவின் வாசனையுடன் சேர்ந்த காற்றும் உலகெங்கும் பரவி நிலைத்திருப்பதைப் போல, கருவில் இருக்கும் சிறிய உயிருக்கு உதவும் மெல்லிய மூச்சுக் காற்றும் குறித்த காலத்தில் மெல்லிய ஒலியோடு உள் புகும்.

பிறக்கப்போகும் குழந்தையின் அம்சம் பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 458

> **ஏற எதிர்க்கில் இறையவன் தானாகும்**
> **மாற எதிர்க்கில் அரியவன் தானாகும்**
> **நேரொக்க வைக்கின் நிகர்போதத் தானாகும்**
> **பேரொத்த மைந்தனும் பேரர சாளுமே**

ஆண், பெண் கூடுதலின் போது, சுக்கிலம், சுரோணிதம் கலக்கும் போது, சுக்கிலம் எதிர்த்துச் செல்லுமானால், பிறக்கின்ற குழந்தை பரமேசுவரன் அம்சமாகும். மாறாக சுரோணிதம் எதிர்த்து வரின் பிறக்கும் குழந்தை திருமாலைப் போலி



ருக்கும். சுக்கிலம் சுரோணிதம் இரண்டும் சமமாகப் பொருந்தி நின்றால் பிறக்கும் குழந்தை பிரமனைப் போலிருக்கும். இந்த மூவரது தன்மையும் பொருந்திய குழந்தை பேரரசனாகச் சக்கராதிபதியாகத் திகழ்வான்.

பிறக்கும் குழந்தை தாய், தந்தையின் சாயலில் இருக்கும் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 459

> **ஏய்அம் அலந்த இருவர்தம் சாயத்துப்**
> **பாயும்கருவும் உருவாம் எனப்பல**
> **காயம் கலந்தது காணப் பதிந்தபின்**
> **மாயம் கலந்த மனோலயம் ஆனதே**

பல பிறப்புக்கள் எடுத்து, வருந்தி அலைந்து, தாய் தந்தையாகிய இருவருடைய சாயலில் பாய்ந்த கரு குழந்தை உருப்பெறும். இப்படி உருவான உயிர் பல உடலில் பொருந்திப் பல பிறவி எடுத்த பின்பு, மன மயக்கு அடைந்து மனம் ஒத்து இருந்தன.





உண்மைக்கு ஆறுதல் பரிசு மட்டுமே...

# “இவர்கள் சொன்னவை”

ஒருவர் நேதாஜியிடம் சொன்னார், ‘ஆங்கிலேயர்களுடையது சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யம்.’
**நேதாஜி சொன்னார்:** ‘உண்மை. அவர்களை இருட்டில் நடமாடவிட இறைவனுக்கே பயம். அவ்வளவு பெரிய திருடர்கள்.’






சாக்ரட்டீஸ் ஒரு சிறிய வீட்டில் குடியிருந்தார். நண்பர் கேட்டார், ‘அய்யா,உங்களுக்கு இந்த சிறிய வீடு போதுமா?’
**அதற்கு சாக்ரட்டீஸ் சொன்னார்;** இவ்வளவு சிறிய வீட்டை நிரப்புவதற்கே உண்மையான நண்பர்கள் கிடைப்பார்களா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது.

ஆப்ரஹாம் லிங்கனின் நண்பர் சொன்னார், ‘நீங்கள் ஏன் உங்கள் பகைவர்களிடம் கூட நட்பு பாராட்டுகிறீர்கள்? நீங்கள் நினைத்தால் அவர்களை ஒழித்து விடலாமே?’
**லிங்கன் சொன்னார்:** ‘நட்பு கொள்ளும் போதே பகைவன் ஒழிந்து விடுகிறானே!’





உன் கையில் என்ன ஆயுதம் இருக்க வேண்டும் என்பதை உன் எதிரிதான் தீர்மானிக்கிறார்.
**- காரல் மார்க்ஸ்.!**

**திருமதி.அனுராதா ரமணன் அவர்கள் எழுதியது:**
‘உங்கள் மனைவியிடம் இல்லாதது எதுவும் பிற பெண்களிடம் இல்லை என்பதை உணருங்கள்.’ மனைவியின் உணர்வுக்கு மதிப்பளியுங்கள். இல்லாததை தேடிச் சென்று வாழ்க்கையை தொலைத்துவிடாதீர்கள்.





உதவும் கரங்கள் ஜெபிக்கும் உதடுகளை விடச் சிறந்தது.
**- அன்னை தெரஸா.**

1977–ல் M.G.R.முதலமைச்சர் ஆன அன்று அவரது இல்லத்தில் நிறையக் கூட்டம். அப்போது மாலை போட வந்த ,கவிஞர். கா. காமராசனிடம் மக்கள் திலகம் எம்.ஜி ஆர்.சொன்னது...
தம்பி, பார்த்தாயா நான் பதவிக்கு வர வேண்டும் என்று பாடு பட்ட தொண்டர்கள் என் வீட்டிற்கு வெளியே நிற்கிறார்கள். ஆனால் தங்களுக்குப் பதவி வேண்டும் என்று கேட்க வந்தவர்கள் எல்லாம் , என் வீட்டிற்குள், எனக்குப் பக்கத்தில் நிற்கிறார்கள். இதுதான் அரசியல்..





‘ஒரு அலுவலகத்தில் அல்லது ஒரு தொழிலில் ஈடுபட்டபோது தவறு செய்தால் தண்டனை தருவார்கள் அல்லது எச்சரிக்கையாவது செய்வார்கள். ஆனால் சினிமாவில் ஒரு காட்சியில் சரியாக நடிக்காவிட்டால் நாற்காலியில் அமரச் செய்து பேன் போட்டு ஆப்பிள் ஜூஸ் கொடுப்பார்கள் !’’
**-நடிகவேள் எம்.ஆர்.ராதா.**

போலிக்கு தான் பரிசும், பாராட்டும்..
உண்மைக்கு ஆறுதல் பரிசு மட்டுமே...
**-சார்லி சாப்ளின்....**





நல்ல முடிவுகள், அனுபவத்திலிருந்து பிறக்கின்றன் ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது.
**- பில் கேட்ஸ் -**

எதிர்ப்புகளை எதிர்கொள்ளுங்கள்,பாறைகளை எதிர்க்கவில்லையேல் ஓடைகளுக்குச் சங்கீதமில்லை ! துயரங்களை ஜீரணித்துவிடுங்கள் , தங்கள் மீது விழும் வெயிலை ஜீரணிப்பதால்தான் மண்ணுக்கு நிழல் தருகின்றன மரங்கள் ! தோல்விகள் எல்லாம் தோல்விகள் அல்ல , தென்னங்கீற்றின் வீழ்ச்சிதான் தென்னை மரத்தின் வளர்ச்சி ! **- கவிஞர் வைரமுத்து**






காலக் கண்ணாடி:



# மேரி

ஏலையா க.முருகதாசன்

இரவு மூன்று மணிக்கு திடீரென கண்விழித்த சிவானந்தம் தனது மனைவி செல்வி கட்டிலில் சாய்ந்து இருந்தபடி அழுது கொண்டிருப்பதைக் கண்டதும் பதைபதைத்து 'ஏன் என்ன நடந்தது, ஏன் அழுகிறாய்' எனக் கேட்க, 'அம்மாவை நினைத்து அழுகிறேன்' என திரும்பவும் விம்மினாள்.

'அம்மா நல்லாத்தானே கனடாவிலிருக்கிறார், அதை நினைத்து ஏன் அழுகிறாய் 'என்றவுடன் 'இல்லை அம்மாவும் நாளைக்கு முதியோர் இல்லத்துக்கு போக வேண்டி வந்தால் மேரிக்கு வந்து நிலைமை அம்மாவுக்கும் வந்துவிடுமோ என்று பயமாகவிருக்கின்றது'என்று செல்வி சொல்லியதும்' அப்படியொன்றும் வராது,இதற்குத்தான் முதியோர் இல்லத்திற்கு வேலை செய்ய போக வேணடாம்,உன்னுடைய இளகிய மனதிற்கு அந்த முதியவர்களைப் பார்க்கும் போது உன்னுடைய மனம் தாங்காது என்று தெரிந்துதான் சொன்னனான் என்று' ஆறுதல்படுத்தினான் சிவானந்தம்.

ஒவ்வொரு நாளும் வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும், முதியோர் இல்லத்தில் உள்ள தாய்மார், தகப்பன்மார் தன்னை தங்கள் மகளாகப் பார்த்து நடந்து கொள்ளும் விதத்தை கணவனுக்குச் சொல்வாள். தான் அவர்களை பராமரித்ததை மறந்துவிட்டு' நேற்று செல்வி நீ வரவில்லை நான் நிறையக் கஸ்டப்பட்டுவிட்டேன் 'என்பார்கள் சிலர்.காலையில் பராமரித்ததை மறந்துவிட்ட சிலர் 'நீ காலையில் காலைச் சாப்பாடு தரவில்லை என்பார்கள்' சிலர்.

இப்படி அவர்கள் ஞாபகத்துக்குள்ளும் ஞாபக மறதிக்குள்ளும் தங்களுடைய வாழ்நாளை நகர்த்திக் கொண்டிருந்தார்கள். இவர்களில் எத்தனை பேர் கெம்பீரமாக மகிழ்ச்சியோடு பிள்ளைகளோடும் பேரப்பிள்ளைகளோடும் வாழ்ந்திருப்பார்கள். பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அவர்களைப் பார்க்க வரும் போது, அவர்களை இனங்கண்டு மகிழ்வதும், அடுத்த நிமிடமே 'நீங்கள் யார்?' என்று அவர்களிடமே கேட்டுவிட்டு, பிள்ளைகளைப் பார்க்க ஆசையாக இருக்கின்றது, அவர்களைச் வந்து என்னைப் பார்க்கச் சொல்கிறீர்களா என்று பிள்ளைகளிடமே சொல்கின்ற நிலைமையைப் பார்த்து செல்வி வேதனைப்பாடாத நாட்களே இல்லை.

தனது தாயையும் அவர்களுடன் ஒப்பிட்டு 'அம்மாவுக்கும் ஒருநாள் இப்படித்தான் ஆகிவிடுமோ' எனக் கலங்குவதும் உண்டு.செல்வி அந்த முதியோர் இல்லத்திற்குள் காலடி எடுத்து வைத்ததுமே ஒரு புதிய உலகத்துக்குள் தான் இருப்பதாகவே உணர்வாள்.அது ஒரு தனி உலகம்.ஞாபகங்களும் மறதியும் மழலைகளின் செய்கைகளை ஒத்த அவர்களின் செய்கைகளினால், அவர்கள் மீது அவள் இரக்கப்படுவாள்.நானும் ஒருநாள் இப்படித்தான் இருப்பேனா என்று அவள் நினைப்பாள்.அவர்கள் சிரிக்கும் போதும்,காயந்து குழிவிழுந்த கண்களிலிருந்து கண்ணீர் வரும்போதும் அவர்கள் எதை நினைத்து அழுகிறார்கள் எதை நினைத்துச் சிரிக்கிறார்கள் என்பதை அவர்களில் சிலர் சொல்வார்கள், சிலருக்குச் சொல்லத் தெரிவதில்லை. மேரி செல்வியின் மீது விருப்பங் கொண்ட மூதாட்டி. தனது கடந்த கால வாழ்க்கையைச் செல்விக்குச் சொல்லி மகிழ்வாள்.அடுத்தநாள் செல்வியை 'நீ யார்' என்று கேட்பாள்.ஒரு நாள், செல்வி முதியோர் இல்லத்துக்குள் நுழைந்ததும் அவளோடு பணிபுரிபவர்கள் 'உன்னுடைய மேரித்தாய்க்கு ஒரு பார்சல் வந்திருக்கு நீயே கொடு' என்று கொடுத்தனர். மேரித்தாயிடம் உங்களுக்கு ஒரு பார்சல் வந்திருக்கின்றது' என்று சொல்ல 'நீயே பிரி' என்று மேரித்தாய் சொல்ல, அதற்குள் மகள் அனுப்பிய கிறிஸ்மஸ் பரிசளிப்புகள் இருந்தன.ஒரு தபால் உறையில் கடிதம் இருந்தது.அந்தக் கடிதத்தில் 'அம்மா எனக்கு புற்றுநோய், இதுதான் நான் உனக்கு அனுப்பும் கடைசி அன்பளிப்பாகவும் இருக்கலாம். இது உன் கையில் கிடைக்கும் போது நான் சிலவேளை இறந்து போயிருப்பேன்' என்றிருந்தது. கடிதத்தை கொண்டோடிப் போய் மற்றப் பணியாளர்களிடம் காட்ட 'நீயே பக்குவமாக அதைச் சொல்' என்றிருக்கிறார்கள். செல்வி மேரித்தாயிடம் உண்மையைச் சொல்ல அதை கவனத்தில் எடுக்காது நிராகரித்து தன் மகள் தன்னை பார்க்க வருவாள் என மகிழ்ந்து சிரித்தாள்.

ஆனால் பார்சல் தாயின் கைக்கு கிடைக்குமுன்பே மேரித்தாயின் மகள் கொரனோ வைரஸ் பரவிய நாட்களில் இறந்த செய்தி முதியோர் இல்லத்திற்கு எட்டியது. மூன்று நாட்கள் செல்ல, செல்வி முதியோர் இல்லத்துக்குள் நுழைந்த போது பணிசெய்வோரின் முகத்தில் வேதனை தெரிந்தது.'ஏன் எல்லோரும் ஒருமாதிரி இருக்கிறீர்கள்' என்று கேட்ட போது, 'கொரனோவால் உன்னுடைய மேரித்தாய்......' என்று சொல்லி அவர்கள் கலங்கியதைக் கண்ட செல்வி புரிந்து கொண்டாள். சுவரோடு சாய்ந்து விக்கி விக்கி அழுதாள்.'கடவுளே மகள் இறந்ததைக்கூட அறிய முடியாது, மகள் தன்னை பார்க்க வருவாள் என்ற நினைப்போடு என்னுடைய மேரித்தாய் போய் விட்டாரே' என்று குரல்விட்டு அழுதாள். 'அழாதை செல்வி' என்று ஆறுதல் படுத்தத்தான் அவர்களால் முடிந்தது. அவளை அணைத்து ஆறுதல்படுத்த முடியவில்லை. கொரோனா என்ற தடுப்பு அவர்களைத் தடுத்து நின்றது.

---

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் இன்று 20.05.2020 பலாப்பழம் ஒன்று 50 ரூபாய்க்கு விலை போனது. 50 பலாப்பழம் வரை இந்த விலைக்கே விற்பனையானது. கடந்த வருடம் யாழ்ப்பாணம் சென்றபோது ஒரு பலாப்பழம் 400 ரூபாய்க்கு குறைய வாங்க முடியவில்லை. இன்று கொரோனா தாக்கத்தால் நாடு தழுவிய ஊரடங்கு அடிக்கடி அமுலில் இருப்பதால், வெகுவாக போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சந்தைப்படுத்த முடியாத நிலையில் உற்பத்தியாளர்கள் உள்ளனர். மாம்பழமும் வீடுகளில் அதிகமாக உள்ளன. உண்பதற்கும் பகிர்வதற்கும் முடியாத நிலை. வளமான பூமியில் மக்களுக்கு இருந்தும் இல்லை என்ற நிலை வராது இருக்கட்டும். பாலப்பழம் ஒன்று 50 ரூபா என்றதும் அது உண்மைதானோ என தாயகத்தில் உள்ள யோ.புரட்சியிடம் தொடர்பு கொண்டபோது நானே விற்றேன். நான் மட்டுமல்ல பலர் அங்கு இப்படித்தான் விற்றார்கள் எனப்பதில் தந்துள்ளார். அட கோடைகால விடுமுறையை நாம் கோட்டைவிடுவோமா?

நன்றி படமும் செய்தியும் : யோ புரட்சி







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# நீலிக்கண்ணீர்!

தமிழில் பேய்க்கதைகளுக்கு பஞ்சமில்லை, அந்தி சாயும் நேரங்களில் வேப்பமர உச்சாணிக்கொம்பில் இருந்து சிரிக்கும் பேய் முதல் கொள்ளிவாய்ப் பேய்களும் குரலைப் பேய்களும் என சஷ்டி கவசம் பட்டியலிடும் பேய்கள் வரை நமக்கு பரிட்சையம், சில சமயம் வஞ்சிக்கப்பட்ட பெண்கள் பேய்களாய் உலாவருவதுண்டு சிலசமயம் ஆசை தீரா ஆன்மாக்கள் நம் கதைகளில் உலாவரும் !

பேய்க்கதை ஒரு புறம் இருக்கட்டும் நாம் உரையாடும் போது பல வாக்கியங்கள், பழமொழிகளை நாம் அறியாமையிலேயே பயன்படுத்துவோம் அவற்றில் ஒன்று ‘நீலிக்கண்ணீர் வடிக்காதே...’ பொய்யாக நடித்து அனுதாபம் பெற நினைப்போருக்கு இந்த வாக்கியத்தை சொல்லிக்காட்டுவர், ஆனால் இந்தத் தொடருக்கு ஒரு 1000 ஆண்டுகட்கு மேலான வரலாறு உண்டு.

அந்தப் பேய்க் கதையை சற்று பார்ப்போமே,தமிழகத்தில் சுமார் 1300 –1400 ஆண்டுகள் முன்பே பிரபலமாக பேசப்பட்ட பேய்க்கதை நீலியின் கதை. இக்கதை பல்வேறு காலகட்டங்களிலும் தொடர்ந்து பேசப்பட்டு வந்துள்ளது. முதலில் ஆவணப்படுத்தப்பட்ட கதையும் இதுவாக இருக்கலாம்.

### இதனை சம்பந்தர் தேவாரத்தில் குறிக்கிறார் !

காஞ்சியில் வாழ்ந்த அந்தணன் ஒருவன் காசி யாத்திரை செய்து அங்கே ஒருத்தர் வீட்டில் தங்கியிருக்கிறான். தங்கியிருந்தவருக்கு ஒரு மகனும் மகளும். காஞ்சியில் இருந்து வந்த அந்தணர் நல்லவராக இருக்கிறாரே என்று தம் மகளை மணம் முடித்துவைக்கிறார் அந்த காசி அந்தணர். திருமணம் முடிந்து மனைவியை கூட்டி காஞ்சிக்கு வருகிறான் அவன், அவர்களுடன் மனைவியின் சகோதரனும் உடன் வருகிறான்.

ஆனால் இந்த காஞ்சி அந்தணனுக்கு முன்னமே திருமணமாகி முதல் மனைவி காஞ்சியில் இருக்கிறாள். அது அவனை உறுத்த ஆரம்பிக்கிறது. இரண்டாவது மனைவியை கொன்றுவிட நினைக்கிறான். தொண்டை நாட்டில் திருவாலங்காட்டை அடைந்து, இரவு தங்க, அந்தணன் குடிப்பதற்கு தண்ணீர் கொண்டுவருமாறு மைத்துனனை அனுப்பிவிட்டு, இரண்டாவது மனைவியை கொலைசெய்து விட்டு, தப்புகிறான்.

தண்ணீருடன் வந்த சகோதரன், சகோதரி இறந்துகிடப்பதைப் பார்த்து, புளிய மரத்தில் தூக்குப் போட்டு இறக்கிறான். இருவரும் நீலன், நீலி என்ற பேய்களாக ஆலங்காட்டையே சுற்றி வந்தனர்.



### அடுத்த பிறவியில் கதை தொடர்கிறது !

அடுத்த பிறவியில் அந்தணன் வைசிய குலத்தில் தரிசனன் என பிறக்க, ஜோதிடர்கள், இவனைப் பழிவாங்க பேய் காத்துக் கொண்டிருப்பதாக எச்சரித்து, பேயிடம் இருந்து தப்ப மந்திரித்த கத்தி ஒன்றையும் கொடுத்தனர். நீலனும், நீலியும் திருவாலங்காட்டில் ஒரு தம்பதிக்கு குழந்தைகளாகப் பிறந்தனர். இருவரும் பகலில் தொட்டிலில் படுத்து உறங்குவார்கள். இரவானதும் பேயாகி ஆடு, மாடுகளை கொன்று ரத்தத்தைக் குடிப்பார்கள். பேய்க் குழந்தைகளை வீட்டில் வைத்துக் கொள்ள பயந்த பெற்றோர், அவற்றை தொட்டிலோடு கொண்டு போய் ஒரு வேல மரத்தில் கட்ட, மீண்டும் பழைய உருக் கொள்கின்றனர்.

வணிகன் பழையனூருக்கு வியாபாரம் செய்யக் கிளம்ப, அவனை நீலி அழிக்க முயல்கிறாள். அவன் மனைவியைப் போல் உருமாறி, ஒரு கட்டையை எடுத்து குழந்தையாக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு தலை விரிகோலமாக பஞ்சாயத்தை கூட்டி, தன் கணவர் தன்னை பிரிந்து செல்ல நினைக்கிறார், நீங்கள் தான் சேர்த்து வைக்க வேண்டும் என்று உருக்கமாக கண்ணீர் விட்டாள். [நீலிக்கண்ணீர்]

வணிகனுக்கு இது பேய், என்னை கொல்ல வந்திருக்கிறது என்று வாதாடியும் எந்த பயனும் இல்லை. உங்கள் உயிருக்கு ஆபத்து வந்தால், பஞ்சாயத்தில் அமர்ந்திருக்கும் நாங்கள் 70 வேளாளர்களும் உயிரை மாய்த்துக் கொள்வோம் என்று அருகில் உள்ள சாட்சிபூதேஸ்வரர் கோவிலில் வைத்து சத்தியம் செய்கின்றனர்.

அன்றிரவு ஒரு வீட்டில் அவர்களை தங்க வைக்கின்றனர் வேளாளர்கள். நீலி இவர் கையில் ஒரு கத்தி வைத்திருக்கிறார் என்னைக் கொன்றுவிடுவார் என்று சொல்ல, மந்திரகத்தியும் வணிகனிடமிருந்து பிடுங்கப்படுகிறது. அன்றிரவே நீலி பேயுருவம் கொண்டு அவனைக் கொன்று பழி தீர்க்கிறாள்.

மறுநாள் இருந்து கிடந்த வணிகனைப் பார்த்த வேளாளர்கள் செய்து கொடுத்த சத்தியத்தின் படி சாட்சிபூதேஸவரர் ஆலயம் முன்பு தீக்குளித்து தங்கள் வாக்கை காப்பாற்றுகின்றனர். இதில் 69 பேர் தீக்குளிக்க ஒரு வேளாளர் ஏற்கனவே வயலுக்கு சென்றுவிடுகிறார். பின்னர் அவரும் விடயம் அறிந்து ஏர்கலப்பையால் உயிரை போக்கி சத்தியத்தை காப்பாற்றுவதாக கதை.



தனசேகர் பிரபாகரன்

அன்று முதல் நீலியின் அந்த நாடகக் கண்ணீர் தமிழில் வழக்காகிப் போனது, கதையோ வரலாறு தமிழில் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு கதை இருக்கத்தான் செய்கிறது.






# நயந்தராவையும் ஜெமினி கணேசனையும் இணைத்து படம் எடுக்கலாம்

இப்போது திரையுலகம் ஒரு புதுயுகத்தில் உள்ளது என்று சொல்லாம். அரைத்த மாவையே திருப்பி அரைப்பது போல் இப்பொழுது முன்வந்த படங்களுக்கு புத்துயிர் கொடுப்பதும். அதனை வெட்டிக் கொத்தி அலங்கரிப்பதும். அதுமட்டுமன்றி அப்பட்தை மீண்டும் தற்போது உச்சத்தில் உள்ள நாயகர்களை வைத்து மீண்டும் எடுப்பதும் ஒரு நாகரீகமாய்ப்போச்சு!. அது மட்டுமல்ல தொலைக்காட்சி நாடகங்கள் போல் படங்களும் சிங்கம் 1, சிங்கம் 2 சிங்கம் 3 மாரி 2 என எப்பிசோட் போல் வருகிறது.

சரி எந்த நடிகர் நடிகைகளை நேர்கண்டாலும். அட நான் சிவாஜி சாரோடு, எம்.ஜி.ஆரோடு ஒரு படம் செய் முடியவில்லையே என்ற வருத்தம் உண்டு என்பார்கள். அதே போல் நடிகர்களைக் கேட்டால் அட அமலாவுடன் நடிக்க முடியவில்லை. கே.ஆர்.விஜயா வுடன் நடிக்க முடியவில்லை என்கிறார்கள். எனவே இப்போ உள்ள தொழில் நுட்பத்தை பாவித்து நடிகர்திலகம் சிவாஜிகணேசன் நடித்த வசந்தமாளிகையை சினேகாவையும் திரிஷாவையும் வைத்து எடுத்தால் எப்படி இருககும் என்ற கற்பனையில் வந்து விழுந்த படங்கள் இவை. எப்படி இருக்கிறது. நயந்தாடவும் எம்.ஜிஆரும் இணையலாம். சூர்யாவும் காஞ்சனாவும் இணைந்து காதலிக்க நேரமில்லை படத்தினைத் தரலாம்.விஜய்யும் அமலாவும் இணைந்து கொடிபற்கிறது படத்தை தரலாம். நயந்தராவையும் ஜெமினிகணேசனையும் இணைத்து [ காதல் மன்னன் அவர் மறைந்தாலும் அவர் ராசி கிசு கிசு வரலாம்.] கற்பனைக்கு கவலையில்லை எது வேண்டுமானாலும். செய்யலாம். இப்போ கற்பனை என்று நினைத்த பலவிடையங்கள் உண்மையாகிவரும் காலம் அல்லவா!



03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பாதுகாப்பது என்பதுதான் அவரது நிகழ்ச்சி நிரலில் முதன்மையானதாக இருந்தது. அதனால்தான் கடந்தமாதம் கோரோனா பீதிக்குள் நாடு மூழ்கியிருந்த வேளையில், மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரை மன்னிப்புக் கொடுத்து சத்தம் சந்தடியில்லாமல் அவர் விடுதலை செய்திருந்தரார். சிறுவன் ஒருவன் உட்பட எட்டு அப்பாபிப் பொது மக்களின் படுகொலைகளுக்குக் காரணமாக இருந்த குறிப்பிட்ட இராணுவச் சிப்பாயின் விடுதலை சர்வதேச ரீதியாக கடும் கண்டனத்துக்குள்ளாகியிருந்தது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கூட அதனை கடுமையாக விமர்சித்திக்கின்றார்.

சர்வதேசத்தின் சரிசனை எவ்வாறானதாக இருந்தாலும், தன்னுடைய அணுகுமுறையை மாற்றிக்கொள்ள ஜனாதிபதி தயாராகவில்லை. இராணுவத்தைப் பாதுகாப்பது என்ற நிலைப்




பாட்டில் தான் உறுதியாக இருப்பதை ஜனாதிபதி தனது ‘இராணுவ வெற்றித் தின’ உரையில் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றார். உலகின் பலம்வாய்ந்த நாடுகளின் தலைவர்கள் கூட தமது நாட்டின் படையினருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதற்கு அனுமதிக்கப்போவதில்லை எனத் தெரிவித்திருக்கின்ற சூழ்நிலையில், எம்மைப் போன்ற ஒரு சிறிய நாட்டில் இத்தகைய அர்ப்பணிப்புகளைச் செய்துள்ள படையினரைப் பாதுகாப்பதற்கு நான் அர்ப்பணிப்புடன் உள்ளேன் என்ற அவரது அறிவிப்பு தெளிவான சில செய்திகளைச் சொல்லியிருக்கின்றது. அதாவது, சர்வதேச அமைப்புக்கள் எதிர்பார்ப்பதைப் போல பொறுப்புக்கூறல் நடைபெறப்போவதில்லை என்பதுதான் அந்தச் செய்தி!

அதேவேளையில், இராணுவ வெற்றி நிகழ்வில் சிறுபான்மையின மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய கருத்துக்கள் எதுவும் கோட்டாபயவால் முன்வைக்கப்படவில்லை. இதிலுள்ள செய்தியையும் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். கோட்டாவைப் பொறுத்தவரையில் அவர் முற்று முழுதாக பௌத்த சிங்களத் தேசம் ஒன்றை உருவாக்குவதை இலக்காகக்கொண்டே செயற்படுகின்றார். சிறுபான்மையினருடைய எந்த நலன்களையிட்டும் அவர் அக்கறைப் படுவதில்லை.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, அரசியல் தீர்வு என தமது வழமையான கோரிக்கைகளுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அடுத்ததாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்திப்பதற்காகக் காத்திருக்கின்றது. அங்குதான் தீர்வு கிடைக்கும் என அவர்கள் நம்புகின்றார்கள். கூட்டமைப்பை ஜனாதிபதி சந்திப்பாரா என்பது முதலாவது கேள்வி. சந்தித்தாலும் அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பது இரண்டாவது கேள்வி. தேர்தலை எதிர்பார்த்துள்ள நிலையில், கூட்டமைப்பை எவ்வாறு கையாள வேண்டும் என்பது கோட்டாபயவுக்குத் தெரியும். ஜனாதிபதியும் அரசாங்கமும் தமது நிலைப்பாட்டில் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றன.

கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் அறிக்கைப் போர்கள் மூலமாக அனைத்தையும் சாதித்துவிட நினைக்கின்றது. கடந்த காலச் சரித்திரம் தெளிவான பல விடயங்களை எமக்குச் சொல்லியிருக்கின்றது. கோட்டாவை சந்தித்தால் தீர்வு கிடைக்கும் எனக் காத்திருக்கும் கூட்டமைப்பின் தலைமை, சரித்திரத்தை ஒழுங்காகப் படிக்கவில்லையா? அல்லது தமிழர்களை ஏமாற்றுகின்றார்களா?








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆனால் பெரும்பாலும் கண்ணாடி தேவைப்படும் நோய்களான தூரப்பார்வை, கிட்டப்பார்வை போன்றவை வராமல் தடுக்கவோ அல்லது குணமாக்கவோ எந்த விட்டமினும் உதவாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நீண்ட நேரம் கணினி முன் இருப்பது கண்களுக்கு நல்லதல்ல என்பது முழுமையாக உண்மையல்ல.

கணனித் திரையை நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது கண்களைச் சோர்வடையச் செய்யும். சில பாதுகாப்புகளை எடுத்துக் கொண்டால் நீண்ட நேரம் கொப்பியூட்டர் பாவிப்பதால் பாதிப்பு எதுவும் ஏற்படாது. உதாரணமாக மேசையில் அல்லது அறையில் இருக்கும் ஒளி விளக்கின் ஒளி கணனித் திரையில் பட்டுத் தெறித்து கண்ணில் படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

அத்துடன் நீண்ட நேரம் கணினி முன் இருக்க நேர்கையில், மணித்தியாலத்திற்கு ஒரு தடவையாவது திரையை உற்றுப் பார்பதைத் தவிர்த்து, பார்வையை சற்று நேரம் தூரப் பொருளுக்கு நகர்த்துவதன் மூலம் கண்ணுக்கான வேலைப்பளுவைத்



தவிர்க்க முடியும். கணனித் திரையை நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கையில் கண் இமைப்பது எம்மை அறியாது குறைகிறது. இதனால் கண்கள் வரட்சியடைந்து உறுத்தல் ஏற்படக் கூடும். இதைத் தடுப்பதற்கு நாமாக நினைவு கூர்ந்து அடிக்கடி கண்களை இமைக்க வேண்டும். இதனால் கண்கள் ஈரலிப்பாக இருப்பதை உறுதிப்படுத்த முடியும்.

உடலுக்கு பயிற்சி கொடுப்பது போல கண்களுக்கும் பயிற்சி கொடுப்பதன் மூலம் கண்பார்வை

குறைவதைத் தடுக்க முடியும் எனப் பலர் எண்ணுகிறார்கள். யோகா போன்றவற்றில் கண் பயிற்சியும் அடங்குகிறது. ஆனால் பயிற்சிகள் மூலம் கண் பார்வை குறைவதைத் தடுக்க முடியும் என்பதற்கு எந்தவிதமான விஞ்ஞான பூர்வ ஆதாரங்களும் கிடையாது.

இதன் அர்த்தம் பயிற்சிகளால் உடலுக்கு நன்மை இல்லை என்பதல்ல. யோகா முதலான உடற் பயிற்சிகள் அனைத்துமே உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன, குருதிச் சுற்றோட்டத்தை மேம்படுத்துகின்றன, தசைகளைப் பலப்படுத்துகின்றன, மூட்டு நோய்களைத் தடுக்கின்றன என்பது உண்மையே.

ஆனால் பெரும்பாலான கண் நோய்கள் கண்ணின் வடிவமைப்பு, அதைச் சுற்றியுள்ள உறுப்புகளின் நலத்திலேயே தங்கியிருக்கின்றன. எனவேதான் கண் நோய்களைத் தடுக்கவோ குணமாக்கவோ பயிற்சிகளை மட்டும் நம்பியிருப்பதில் பிரயோசனமில்லை.

ஆனால் நீங்கள் புகைப்பவராயின் அதனை நிறுத்துவதன் மூலம் கண்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் பலவற்றையும் தடுக்க முடியும். முக்கியமாக வயதாவதால் ஏற்படும் மக்கியுலர் சிதைவு நோயைத் தடுக்க முடியும்.

சன் கிளாசஸ் அணிவதும், தொப்பி அணிவதும் உதவும். பழவகைகள், மரக்கறிகள் ஆகியவற்றை அதிகரிப்பதும், கொழுப்பு உணவுகளை முக்கியமாக ரான்ஸ் கொழுப்பு அமிலங்கள் சேர்ந்த உணவுகளைத் தவிர்ப்பதும் கண்களைக் காப்பாற்ற நிச்சயம் உதவும்.

21 Page Continu...

Cultural Asanas are sub-divided into physical asanas and relaxing asanas.

Today we find that yoga is spread all over the world. But unfortunately, people learn yoga under various people and various institutions which are commercializing yoga. Yoga instructs the practitioner to first of all choose a pure environment, undisturbed place, Shatvik food, and control the waring mind. Many do not find the difference between yoga and physical exercises. Yoga should be learnt under the Guru who should have not only mastered yoga but should be able to impart his knowledge to the deserved students. Therefore, yoga is not like learning any other sports. Finally, one should choose the right Guru to learn yoga. Then the yoga knowledge will be early obtained in the right manner. Let us all be alert in following yoga through a proper Guru and experience the divine light‘s energy.

II ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்த தொற்றுநிலை சார்ந்த தடைகளால், முக்கியமான நிகழ்வுகள், பட்டமளிப்பு விழாக்கள், பள்ளியின் விளையாட்டு நிகழ்வுகள், என பல அனுபவங்களை பதின்மவயதினர் தவறவிட்டிருக்கின்றனர். அவர்கள் ஏமாற்றங்களை அறிந்துகொள்ளுங்கள். அங்கீகரியுங்கள். அதன் பின், இந்த இழப்புகளில் இருந்து மீண்டு வரக்கூடிய தைரியம் அவர்களுக்கு இருக்கிறது என்பதை உணர வையுங்கள்.

உணர்வுகளை ஏற்றுக்கொள்ளுங்கள். தராசில் நிறுத்து பார்க்காமல், சரியோ தவறோ, நல்லதோ கெட்டதோ என ஆராயாமல், உணர்வுகளோடு சண்டையிடாமல், உணர்வதை உணரவிடுங்கள். உங்களுக்கே சொல்லிக் கொள்ளுங்கள். ‘கவலையாக இருக்கிறது. இந்த நிலை மிகவும் கொடியது. பயமாக இருக்கிறது....சரி...இனி அடுத்தது என்ன? இதற்கு என்ன செய்யலாம்?’ இப்படி சிந்திக்க ஆரம்பித்தால் அது நம்மை முன்னோக்கி நகர வைக்கும்.



உங்கள் நலம்: நீங்கள் சொல்வதை விடவும், என்ன செய்கிறீர்கள் என்பதையே பிள்ளைகள் மாதிரியாக எடுத்துக் கொள்கிறார்கள்.

உங்களை கவனியுங்கள். ஆரோக்கியமான உணவை உண்ணுங்கள். உடல் பயிற்சி செய்யுங்கள். நல்ல நித்திரை அவசியம். நல்ல காற்றைச் சுவாசிக்க மறந்துவிடாதீர்கள். மன உளைச்சலாக, அதிகம் அழுத்தமாக உணரும் பெற்றோர்கள், சில கணங்கள் நிதானித்து, தம்மை தாமே கேட்டுக்கொள்ள வேண்டும்:

இந்த பிரச்சனை உடனடி ஆபத்தை விளைவிக்க கூடியதா? இது பற்றிய என் உணர்வுநிலை நாளைக்கு எப்படி இருக்கும்? இந்த நிலை நிரந்தரமானதா? நீங்களே உங்களைக் கேட்க வேண்டிய கேள்விகள் இவை.

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

வீட்டுக்குள்ளே முடங்கி இருக்காமல் வெளியில் செல்வது நன்மை தரும். நிறைய இளையவர்கள்

முதியவர்களுக்கு கடைகளுக்குச் சென்று தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்கிறார்கள்.

விளையாட்டுகளுக்கும் உடல்பயிற்சிக்கும் சென்றவர்களுக்கு கட்டுப்பாடுடன் இருப்பது உடலுக்கும்



மனதிற்கும் துன்பத்தைத் தருகிறது. இதனால் நாம் ஒன்றும் செய்யாமல் வீட்டுக்குள்ளே இருக்கக்கூடாது. வெளியே சென்று உடற்பயிற்சி செய்யலாம் அல்லது வீட்டிலும் கூட.

தற்போது இணையத்தளம் ஊடாக நிறைய இளையவர்கள் சோர்ந்து போகாமல் பல வித்தியாசமான நிகழ்ச்சிகளைச் செய்து வருகிறார்கள்.

ஆனால் யேர்மனியில் தற்போது கடைகளும் உணவகங்களும் மீண்டும் திறக்கப்பட்டதில் அனைவருக்கும் மகிழ்ச்சி.

முக்கியமாக கடினமாக இருப்பது விழாக்களின் சந்தோசம். கலை நிகழ்வுகள், பிறந்தநாள் விழாக்கள், திருமண விழாக்கள் மற்றும் இன்னும் பல. ஆட்டம் பாட்டம் என இருந்தவர்களுக்கு கடினம் ஆனால் எல்லோருடைய நலம்கருதி சில கட்டுப்பாடுடன் வாழப் பழகிக் கொள்வோம்.

சமூக இடைவெளி என்பதை இளையவர்கள் குயஉநடிழழமஇ ஐளெவயபசயஅ ஊடாக இல்லாமல் செய்கிறார்கள்.

நாம் வீட்டில் இருப்பது பெற்றோர்களுக்கு மாத்திரம் மிகவும் சந்தோசம்.

உயிர்களைக் காப்பது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்!






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் வாழ்வும் படைப்பும்

வெற்றிமைந்தன்

## மூன்று முடிச்சு

ஹீரோ கமலஹாசனும், வில்லன் ரஜினிகாந்தும் இணை பிரியாத நண்பர்கள். கமலுக்கு அதே அப்பார்ட்மெண்டில் வசிக்கும் ஸ்ரீதேவி மீது காதல். ஸ்ரீதேவிக்கும் கமல் மீது காதல். ரஜினிகாந்துக்கு எப்படியாவது இந்தக் காதலை உடைத்து ஸ்ரீதேவியை தன்னவளாக்கிக் கொள்ள வேண்டும் எனும் தாகம். ரஜினிகாந்தின் எண்ணம் ஸ்ரீதேவிக்குத் தெரியும். ஆனால் ரஜினியை அதிகமாய் நேசிக்கும் கமல் ஸ்ரீதேவியின்; பேச்சைக் கேட்பதில்லை.

மூவரும் ஒரு பிக்னிக் செல்கிறார்கள். நதியில் படகு சவாரி செல்லும்போது கமல் தவறி தண்ணீரில் விழுந்து விடுகிறார். ரஜினி நீச்சல் தெரியாதது போல நடித்து கமலைக் காப்பாற்றாமல் விடுகிறார். ஸ்ரீதேவி அதிர்ச்சியடைகிறார். அதிர்ச்சியுடன் வீட்டுக்கு வந்த ஸ்ரீதேவிக்கு அவளுடைய சகோதரி தீவிபத்தில் சிக்கிக் கொண்ட விஷயமும் தெரிய வருகிறது. அவளுடைய வாழ்க்கையை அந்த தினம் புரட்டிப் போடுகிறது.

இப்போது ஸ்ரீதேவிக்கு வேறு வழியில்லை. ரஜினி அவரை தனது வீட்டில் வேலைக்காக அழைத்துச் செல்கிறார். தனது வலையில் விழவைக்க முயற்சி செய்கிறார். ஸ்ரீதேவியோ ரஜினியைப் பழிவாங்குவதற்காக அவருடைய தந்தையைக் கல்யாணம் செய்து கொள்கிறாள்.

இந்த வருடம் தான் 'அவள் ஒரு தொடர்கதையை' அந்துலேனி கதா எனும் பெயரில் தெலுங்கில் இயக்கினார் பாலசந்தர்.

அடுத்த ஆண்டு மீண்டும் ரஜினிகாந்த் கமலஹாசன் இருவரையும் வைத்து பாலசந்தர் மீண்டும் ஒரு அட்டகாசமான படத்தைக் கொடுத்தார்.

அந்தப் படம் தான் அவர்கள்.

## அவர்கள்

பாலசந்தர் கதை எழுதும் விதம் சுவாரஸ்யமானது. எல்லோரையும் போல முகவுரை, நிகழ்வுகள், முடிவுரை என கதை எழுதும் பழக்கம் பாலசந்தரிடம் இல்லை. முதலில் கதாபாத்திரங்களை உருவாக்குவார். வேறுபட்ட கதாபாத்திரங்களைச் சுற்றி கதையைப் பின்னுவார்.அவற்றை கோடுகளால் இணைப்பார். முடிச்சுகளை உருவாக்குவார். கதை தானாகவே உருவாகிவிடும்.

அப்படி உருவான படம் தான் அவர்கள். கமலஹாசன், ரஜினிகாந்த், சுஜாதா மூவரும் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்த படம். படத்தின் கதாபாத்திரத்துக்காக தன்னை மிகவும் வருத்தித் தயார்படுத்திக் கொள்ளும் கமலஹாசன் இந்தப் படத்துக்காக வென்றிலோகிசம் எனும் கலையைக் கற்றுக் கொண்டார்.




வாயைத் திறக்காமல் பேசி, கையிலிருக்கும் பொம்மை பேசுவது போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்கும் கலை தான் இது. ஜூனியர்.. ஜூனியர் எனும் பாடலில் கமலஹாசன் செயல்படுத்துவது இந்தக் கலை தான்.

கதை இது தான். அனு அழகான இளம்பெண். ஜாலியாக வாழ்க்கை வாழும் அவளுக்கு ஒரு காதலன் உண்டு அவன் பரணி. காதல் வளர்ந்து வருகையில் அவளுடைய அப்பாவுக்கு மும்பையில் பணி மாற்றம். இவளுடைய காதல் கடிதங்களுக்கெல்லாம் பரணியிடமிருந்து பதில் இல்லை. எனவே அவளுடைய காதல் வலுவிழக்கிறது.

அதே நேரம் அவளுடைய தந்தைக்கு உடல் நிலை சரியில்லை. அவர்களுக்கு உதவுகிறார் ராமநாதன் என்பவர். அவர் தந்தையின் அலுவலகத்தில் வேலை செய்பவர். ராமநாதன் அனுவைத் திருமணம் செய்ய ஆசைப்படுகிறார். அனு ஒத்துக் கொள்கிறாள். தனது பழைய காதல் வாழ்க்கையையும் அவனிடம் சொல்கிறாள்.



ராமநாதன் ஒரு சேடிஸ்ட் என்பது தெரிய வருகிறது. அனு நிறைய கொடுமைகளைச் சந்திக்கிறாள். கடைசியில் வேறு வழியில்லாமல் அவனை விட்டுப் பிரிந்து விவாகரத்து வாங்கிக் கொண்டு சென்னை வருகிறாள். கையில் கைக்குழந்தை. சென்னையின் ஜனார்தன் என்பவர் அவளுக்கு உதவியாக இருக்கிறான். அவன் வென்றிலோகிசம் கலையின் மூலம் தன் காதலைச் சொல்கிறான்.

இதற்கிடையில் தான் பரணிக்கு எழுதிய கடிதங்கள் எதுவும் பரணியைச் சென்றடையவில்லை என்பதை அறியும் அனு மீண்டும் பரணியைக் காதலிக்கிறாள். அவளுடைய பழைய கணவன் இப்போது அவளுடைய மேலதிகாரியாக சென்னை வருகிறான். தான் திருந்தி விட்டதாகவும் மீண்டும் திருமணம் செய்து கொள்ளுமாறும் கெஞ்சுகிறான்.

மூன்று ஆண்களுக்கும்

30 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

29 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இடையே அகப்பட்டு என்ன செய்வதென தெரியாமல் திகைக்கும் நிலை அனுவுக்கு. இப்படி ஒரு பாலசந்தர் ஸ்டைல் கதை அவர்கள் ! கணவனாக ரஜினிகாந்த், கலைஞனாக கமலஹாசன், காதலனாக ரவிகுமார் நடிக்க அனுவாக சுஜாதா அமர்க்களப் படுத்தியிருந்தார்.அதற்காக சிறந்த நடிகைக்கான பிலிம் ஃபேர் விருதும் அவருக்குக் கிடைத்தது.

அட்டகாசமான நடிப்பு, பிரமாதமான பாடல்கள், அற்புதமான இயக்கம் என பெரும் வரவேற்பைப் பெற்ற படம் அவர்கள். வசூல் ரீதியாக எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை என்றாலும் பாலசந்தரின் முத்திரைப் படங்களின் பட்டியலில் இந்த படத்துக்கு ஒரு நிச்சய இடம் உண்டு.

அவர்கள் படத்தைத் தவிர இந்த ஆண்டில் பாலசந்தர் ஆய்னா எனும் இந்திப் படத்தையும், பட்டினப் பிரவேசம் எனும் தமிழ்ப் படத்தையும் இயக்கினார். இதில் ஆய்னா படம் அவருடைய அரங்கேற்றம் திரைப்படத்தின் இந்திப் பதிப்பு !

## நிழல் நிஜமாகிறது

பாலசந்தர் படங்களின் இன்னொரு மைல் கல் நிழல் நிஜமாகிறது. 1978ம் ஆண்டு வெளியான இந்தப் படத்திலும் கமலஹாசனே ஹீரோ ! கமலஹாசனின் படிப்படியான வளர்ச்சிக்கு உத்தரவாதம் தந்தவர் பாலசந்தர் என்பதை அவருடைய ஆரம்ப காலப் படங்கள் உறுதிப் படுத்துகின்றன.

நிழல் நிஜமாகிறது படம் 1977ம் ஆண்டு தெலுங்கில் வெளியான சில கம்ம செப்பிந்தி திரைப்படத்தின் தமிழ் வடிவம். தெலுங்கு படம் வெற்றிகரமாக ஓடி நந்தி விருதையும் வாங்கியது. எரங்கி ஷர்மா என்பவரின் இயக்கத்தில் வெளியான இந்தப் படம் சர்வதேச திரைப்பட விழாவிலும் திரையிடப் பட்டது.

தெலுங்கில் இந்தப் படத்தில் கதாநாயகனாக நடித்தவர் யார் தெரியுமா ? ரஜினிகாந்த் ! அவர் கதாநாயகனாக நடித்த முதல் படம் இது தான்.

தமிழில் இந்தப் படத்தைக் கமலஹாசனை வைத்து இயக்கினார் பாலசந்தர். இந்தப் படம் மூலம் இன்னொரு முக்கியமான கதாபாத்திரத்தை அறிமுகப்படுத்தினார் பாலசந்தர். அவர் தான் சரத் பாபு !



ஷோபாவை தமிழில் முக்கியமான கதாபாத்திரத்தில் முதன் முதலில் அறிமுகப்படுத்தியது கூட இந்தப் படம் தான். ஆனால் அச்சாணி திரைப்படம் முந்திக்கொண்டு ரிலீஸ் ஆனதால் 'அச்சாணி'யின் அறிமுக நாயகியானார் ஷோபா. ஆனால் 1966ம் ஆண்டிலேயே 'தட்டுங்கள் திறக்கப்படும்' படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக தமிழ்த் திரையின் வருகைப்பதிவேட்டில் அவர் கையொப்பமிட்டார் என்பது சிறப்புச் செய்தி !

வெங்கடாசலமும், இந்துமதியும் அண்ணன் தங்கை. இந்துமதிக்கு ஆண்கள் என்றாலே அலர்ஜி. திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என உறுதியாக இருக்கிறாள். வெங்கடாசலத்தின் நண்பன் சஞ்சீவி நண்பரைச் சந்திப்பதற்காக அடிக்கடி அந்த வீட்டுக்கு வருகிறான். அவனுக்கு இந்துமதியின் குணாதிசயம் ரொம்பப் பிடித்துப் போகிறது. போகப் போக இந்துமதிக்கும் சஞ்சீவியைப் பிடித்துப் போகிறது. ஆனால் அதைச் சொல்ல அவளுடைய ஈகோ தடுக்கிறது.

வெங்கடாசலத்தின் வீட்டில் வேலை செய்கிறாள் ஒரு இளம்பெண் திலகம். அவள் மீது வெங்கடாசலம் மோகம் கொள்கிறான். கர்ப்பமாக்கி விட்டு அவளை உதாசீனம் செய்கிறான். வீட்டை விட்டு வெளியேற்றப்படும் திலகத்துக்கு சஞ்சீவியும், வெங்கடாசலத்தின் வீட்டில் வேலை செய்யும் காசி என்பவரும் உதவி செய்கிறார்கள்.

திலகம் ஒரு குழந்தைக்குத் தாயாகிறாள். இதற்கிடையில் வெங்கடாசலத்தின் மனதை மாற்றுகிறார்கள் சஞ்சீவியும், காசியும். அவன் மனம் திருந்தி திலகத்தை ஏற்றுக்கொள்ள முடிவெடுக்கிறான். ஆனால் திலகமோ, தனது மிச்ச வாழ்க்கையை காசியுடன் செலவிட முடிவெடுத்து வெங்கடாசலத்தை நிராகரிக்கிறாள்.




ஈகோவின் பிடியில் கிடந்த இந்துமதியும் இறுக்கம் தளர்ந்து சஞ்சீவியை சேர்கிறாள். இது தான் படத்தின் கதை. அதை தனக்கே உரிய பாணியில் இயக்கி வெற்றிப்படமாக்கியிருந்தார் பாலசந்தர். வசனங்கள் பெரிதும் பேசப்பட்டன.

படத்தில் சஞ்சீவியாக கமலஹாசனும், இந்துமதியாக சுமித்ராவும்,திலகமாக ஷோபாவும், வெங்கடாசலமாக சரத்பாபுவும் நடித்திருந்தார்கள்.பாலசந்தர், இயக்குனர் சிங்கீதம் ஸ்ரீனிவாஸராவுடன் ஒரு விழாவுக்குச் சென்றிருந்தபோது தான் சரத்பாபுவை பார்த்தார்.

'இந்தப் பையனை உங்களுக்குத் தெரியுமா ?' என பாலசந்தர் கேட்க, சிங்கீதம் சரத்பாபுவை பாலசந்தருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.'நடிக்கிறியா ?' என்று ஒரே ஒரு கேள்வி தான் கேட்டார் பாலசந்தர். அடுத்த நாளே பாலசந்தரின் அலுவலகத்துக்குச் சென்றார் சரத்பாபு. அவருடைய திரைவாழ்க்கையும் ஆரம்பமானது ! பிற்காலத்தில் கலைமாமணி விருது வாங்கிய பிரபல மௌலியின் திரைவாழ்க்கையும் இந்தப் படம் மூலம் தான் ஆரம்பமானது ! இந்தப் படத்துக்காக 16 நகைச்சுவைக் காட்சிகளை மௌலி எழுதினார்.

கண்ணதாசனின் வரிகளில் எம்.எஸ். விஸ்வநாதனின் இசையில் எஸ்பிபியின் குரலில் 'கம்பன் ஏமாந்தான்..' எனும் பாடல் எப்போது கேட்டாலும் ரசனையின் நரம்புகளை சிலிர்க்க வைக்கிறது இல்லையா?. 'இலக்கணம் மாறுதோ' எனும் பாடலும் எஸ்பிபியின் ஹிட்பாடல்களின் வரிசையில் தான் என்பதை மறுக்க முடியுமா ?

பாலசந்தர் வெறுமனே சின்னச் சின்ன கதாபாத்திரங்களை உருவாக்குவதில்லை. அவருடைய படங்களில் இருக்கும் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றுமே வலிமையானதாய் இருக்கும். அதற்கேற்ப கதைகளையும், கதாபாத்திரங்களையும் உருவாக்குவதில் அவர் வல்லவர்.

அதே ஆண்டு வெளியாகி பாலசந்தரை தெலுங்கு சினிமாவின் உச்சத்துக்குக் கொண்டு சென்ற ஒரு படம் 'மரோ சரித்ரா'.





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# தலைவன் இருக்கின்றான்

## படத்தை மட்டும் பாருங்கள்!

lockdown காரணத்தால் பல திரைப்படங்கள் இடையில் நிற்கின்றன. இரண்டு மீற்றர் இடைவெளியில் கமலகாசன் ஒரு போதும் நடிக்க முடியாது. நடிகைகள் பூஜா குமாரும், ஆண்ட்ரியாவும் இருக்கிறார்கள். எனவே இது தற்போது சாத்தியமில்லை என இணையத்தில் கழுவி ஊற்றுகிறார்கள். படத்தை மட்டும் பாருங்கள்! தனிப்பட்ட வாழ்க்கைக்குள் மூக்கை நுழைக்காதீர்கள்.



கமல்– பூஜா குமார்

தலைவன் இருக்கின்றான் படத்தில் நடிகர் கமல்ஹாசனுக்கு நெருக்கமான நடிகையும் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தியன் 2 படத்தை தொடர்ந்து நடிகர் கமல்ஹாசன் நடிக்கவுள்ள படம் தலைவன் இருக்கின்றான். தேவர் மகன் படத்தின் இரண்டாம் பாகமாக இந்தப் படம் இருக்கும் என்று கூறப்படுகிறது.

இந்தப் படத்தை கமலின் ராஜ்கமல் பிலிம்ஸ் மற்றும் சுபாஷ்கரனின் லைக்கா புரடெக்ஷன் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இப்படத்திற்கு ஏஆர் ரஹ்மான் இசையமைக்கிறார்.

தலைவன் இருக்கின்றான் படம் குறித்து நாள் தோறும் ஒரு தகவல் வெளியாகி வருகிறது. இந்தப் படத்தில் விஜய் சேதுபதி மற்றும் வைகைப்புயல் வடிவேல் ஆகியோர் நடிக்க உள்ளனர் என்பது ஏற்கனவே அனைவரும் அறிந்த விஷயம்.

நடிகைகள்? தேவர் மகன் படத்தில் நாசர் வில்லனாக நடித்திருந்தார். அவருக்கு மகனாக விஜய் சேதுபதியுடன் தலைவன் இருக்கின்றான் படம் தொடரும் என தகவல் வெளியானது. இந்நிலையில்; படத்தில் நடிகைகள் பூஜா குமாரும் ஆண்ட்ரியாவும் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

பூஜா குமாரும், ஆண்ட்ரியாவும் ஏற்கனவே கமலுடன் விஸ்வரூபம் மற்றும் உத்தம வில்லன் ஆகிய படங்களில் நடித்துள்ளனர். பூஜா குமார் கவுதமிக்கு பிறகு நடிகர் கமலுடன் நெருக்கமாக இருந்து வருகிறார். கமலும் குடும்ப விழாக்களில் கூட பூஜா குமாரை விடாமல் சேர்த்துக் கொள்கிறார்.

இதனாலேயே இருவர் குறித்தும் ஏராளமான கிசுகிசுக்கள் வைரலானது. இந்நிலையில் நடிகை பூஜா குமார் தலைவன் இருக்கின்றான் படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது. இதேபோல் நடிகை ரேவதியும் தேவர்மகன் படத்தில் செய்த பாத்திரத்தையே செய்ய உள்ளார் என கூறப்படுகிறது.

தேவர்மகன் படத்தில் சிவாஜி கணேசன், கமல்ஹாசன், ரேவதி, கவுதமி, நாசர் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். சிவாஜி கணேசனுக்கு மகனாக சக்திவேல் கதாப்பாத்திரத்தில் நடித்த கமல், அப்பாவான சிவாஜி மறைவுக்கு பிறகு கிராம மக்களின் பிரச்சனைகளை தீர்க்கும் தலைவராக நடித்திருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.




# தென்னிந்திய திரைப்படங்களும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழரும்

திரைப்படத்துறை பெரும் சரிவை கண்டுள்ள நேரம். குறிப்பாக இன்று தென்னிந்திய திரைப் படங்களைக் காத்துவருவதில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களுக்கும் முக்கிய பங்குண்டு என்றால் அது மிகையாகாது. அது மட்டுமன்றி பெரிய முதலீடுகளில் படங்களைத் தயாரிப்பதும் நம்மவர்களே. இதனைப் பெருமைக்காகக் கூறவில்லை. உண்மை அதுதான்.

ரஜினியின் அண்ணாத்த, விஜய் நடிக்கும் மாஸ்ரர், மற்றும் அஜித்தின் வலிமை என்பன lockdown இல் முடங்கிப்போய் உள்ளது. இந்நிலையில் மாஸ்டர் படம் வெளியிடுவதில் ஏற்படும் தாமதத்தால் பெரும் பண நெருக்கடியில் சிக்கியிருக்கிறார். அதன் தயாரிப்பாளர் லலித்குமார். இதனை அறிந்த விஜய், மாஸ்டர் படத்தால் ஏதாவது பண சிக்கல் ஏற்பட்டால் அவருக்கு தான் ஒரு படத்தில் நடித்து தருவதாக கூறியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனிடையே விஜய் விரைவில் தனது 65வது படத்தை அறிவிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.

நடிகர் அஜித்தின் 60வது திரைப் படம் வலிமை. ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் இப்படத்தை



அண்ணாத்த

தயாரிக்கின்றார். தீரன் அதிகாரம் 2, நேர்கொண்ட பார்வை என தொடர் வெற்றி படங்களை தந்த ஹெச்.வினோத் அஜித்தின் புதிய படத்தை இயக்குகிறார். இப்படத்தில் காவல்துறை அதிகாரியாக நடிக்கும் அஜித்திற்கு ஜோடியாக நயன்தாரா மற்றும் கீர்த்தி சுரேஷ் நடிக்க பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


EurAsian-Tour
Emirates
EurAsian-Tour
Further Str.146
41462 Neuss
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 7387 83 Fax:02131 73 87 84
info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
'Jasmin Silk House"
Fester Str.50-
40882 Ratingen
Tel: 02102 844744
HP: 0173 1937 325


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram.
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303
Fax: 02161-309282


Stuttgart நகரில்...
PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197 Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிட்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Tel: 0711 615 8976/ 0170 334 4059


VS
G.Vijay Home Designer
Sauber- Profëssuonell- Punktlich- Preiswert
Web.www.vijay-home-designer.de
உங்கள் வீடுகளை சிறப்பாக
வடிவமைக்க நாடுங்கள்!
சிறந்த தொழில் தேர்ச்சிபெற்றவர்களால்
குறித்த நேரத்தில் குறைந்த செலவில்
நேர்த்தியாகச் செய்து தரப்படும்
Kleiststrasse 07
41844 Wegberg
Germany
Facebook:
Vijay Home Designe Gunaratnam 0176 7221 8466
inh.: Gunaratnam Vijayakumar
Telefon: +49 176 72 21 84 66
e.mail: G.Vijay@outlook.de


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
SARAVANAA BHAVAN
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


Double Horse
Nila
AGAM
அகம்
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
BTM
Aachi
Rabeena
Tel: 0231 860 26 96
STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698